செந்தமிழ்

தொகுதி 89 மார்ச்சு 95 பகுதி 1

காலாண்டு இதழ்

ஆசிரியர் : மா. தனுக்கோடி பாண்டியன் பி.ஏ.,பி.எல்.

மதுரைத் தமிழ்ச் சங்கம், மதுரை-1.

பொறுப்பாசிரியர் : பேராசிரியர் பேரறிஞர்

நா. பாலுசாமி எம்.ஏ.,பி.எல்.,எம்.லிட்.,பிஎச்.டி.,எம.எட்..

பொருளடக்கம்

பக்கம்

1. எல்லோர்க்கும் தொல்காப்பியம் — 1
பேரறிஞர் நா. பாலுசாமி

2. காந்தியடிகளும் சமுதாயச் சீர்திருத்தமும் — 15
பேரறிஞர் அ. மா. பரிமணம்

3. பிற்காலச் சோழர் காலத்தமிழ் இலக்கியங்கள் காட்டும் நீர்வளம் — 27
பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

4. இணைப்பு மலர்களில் வாசகர் கடிதங்கள் — 32
ஆ. நாகராசன்

5. இனி ஒரு விதி செய்வோம் — 42
செ. முத்தரசப்பன்

6. சங்க இலக்கியத்தில் பிறழ உணரப்பட்ட உரிச்சொற்கள் — 44
பேரறிஞர் எஸ்.செளந்தரபாண்டியன்

7. சப்பானிய ஐக்கூ — அட்டை பின்பக்கம்
அமரன்

எல்லோர்க்கும் தொல்காப்பியம்

—பேரறிஞர். ந. பாலுசாமி

சொல்லதிகாரம் - கிளவியாக்கம்

கிளவி - சொல்; ஆக்கம் - ஆகிவருதல் அல்லது வளர்தல். கிளவியாக்கம் என்பது சொற்கள் பொருள்களின் மேல் ஆகிவருதல். அதாவது, உலகில் பல்வேறு பொருள்களைக் குறித்துச் சொற்கள் பெருகுதல் அல்லது வளர்தலாகும்.

கண்ணன் என்னும் சொல் ஓர் ஆளைக் குறிக்கிறது; பசு என்பது ஒரு விலங்கைக் குறிக்கிறது; மரம், வண்டி என்ற சொற்கள் அந்த அந்தப் பொருளைக் குறிக்கின்றன. இங்குக் காட்டப்பெற்ற கண்ணன், பசு, மரம், வண்டி என்னும் பொருள் களுள் முதலில் வரும் மூன்றும் உயிருடையன; வண்டி உயிரில் லாதது. உயிருள்ள கண்ணன், பசு, மரம் என்பனவற்றுள்ளும் கண்ணன் ஆறு அறிவு படைத்து, நல்லது, கெட்டது என்று பிரித்து உணரும் இயல்புடைய ஒரு மனிதன். மற்ற இரண்டும் உயிருடையன என்றாலும், மனிதனைப் போலப் பகுத்துணரும் தன்மை அற்றவை. எனவே, உயிருள்ளவும் உயிரில்லவும் ஆகிய பல்வேறு பொருள்களைச் சுட்டியுணர்த்தி, சொற்கள் பலவாகப் பெருகுகின்றன. இவ்வாறு சொற்கள் பெருகி வருவதையே சொல்லாக்கம்-சொற்பெருக்கம்-கிளவியாக்கம் என்கிறோம். இனி சூத்திரம் வருமாறு :

1. உயர்திணை என்மனார் மக்கட் சுட்டே
அஃறிணை என்மனார் அவரல பிறவே
ஆயிரு திணையின் இசைக்குமன சொல்லே.

(பதவுரை)

மக்கள் சுட்டு-மக்கள் என்று மதிக்கப்படுவோரையே உயர்திணை-உயர்வாகிய பிரிவினர், என்மனார்-என்று அறிஞர் கூறுவர்; அவர் அல-அம்மக்களல்லாத, பிற-மற்ற எல்லாவற்றையும், அஃறிணை - உயர்வல்லாத

பிரிவின, என்மனார்-என்று கூறுவர்; அ-அந்த, இரு திணையின் - இரண்டு பிரிவுகளின் மேல், சொல்-சொற்கள், இசைக்கும்-வளரும்.

(விளக்கவுரை)

என் + மன + ஆர் = என்மனார்; என்ப, என்பர் என்பதே என்மனார் என ஓசை இன்பம் நோக்கி வந்தது. அறிஞர் என்ற எழுவாய் வருவிக்கப்பட்டது. உயர்திணை - ஒருவனது உயர்வுக்குக் காரணமாகும் ஒழுக்கம். அல் + திணை = அஃறிணை. அதாவது, திணை அல்லாதது. திணை-ஒழுக்கம். மனிதன் பிற உயிரினங்களை விடச் சிறந்திருப்பதற்குக் காரணம் ஒழுக்கமே. விலங்குகளிடம் ஒழுக்கம் பார்ப்பதில்லை. எனவே, ஒழுக்கம் காக்கக் கடமைப்பட்ட மனிதப் பிறப்பே உயர்ந்த பிறப்பாம். மற்ற உயிருள்ளனவும் உயிரில்லனவும் ஒழுக்கமின்மையால் உயர்வல்லாத பிறவிகளாம். மனிதப் பிறவியே உயர்ந்த பிறவி என்பதாம். அ + இரு = ஆயிரு (அ, ஆ என நீண்டது) அ-சுட்டெழுத்து.

சூத்திரம் 2

ஆடூஉ அறிசொல் மகடூஉ அறிசொல்
பல்லோர் அறியும் சொல்லொடு சிவணி
அம்முப் பாற்சொல் உயர்திணை யவ்வே.

(ப. உரை) ஆடூஉ-ஆண்மகனை, அறி-குறிக்கும், சொல்-சொல்லும், மகடூஉ-பெண்மகளை, அறி-குறிக்கும், சொல்-சொல்லும், பல்லோர்-(ஆண், பெண் ஆகிய) பலரை, அறியும்-குறிக்கும், சொல்லொடு-சொல்லோடு, சிவணி-பொருந்தி வரும், அமுப்பால்-அந்த மூன்று பால்களையும் குறிக்கும், சொல்-சொற்கள், உயர்திணைய-உயர்திணைச் சொற்களாகும்.

(வி. உரை) ஆடூஉ-ஆண், மகடூஉ-பெண்; ஏ-அசை. பல்லோர்-பலர். மகன்-ஆண்பால், மகள்-பெண்பால். மக்கள் (ஆணும் பெண்ணும் ஆகிய இருவரையும் குறிப்பதால்) பலர்பால், பால்-பகுதி அல்லது பிரிவு; உயர்திணைக்கு இம்மூன்று பால்கள் உண்டு. எடுத்துக்காட்டு: அவன்-ஆண்பால், அவள்-பெண்பால், அவர்-பலர்பால்.

சூத்திரம் 3

ஒன்றறி சொல்லே பலவறி சொல்லென்று
ஆயிரு பாற்சொல் அஃறிணை யவ்வே.

(ப. ரை) ஒன்று அறி – ஒரு பொருளைக் குறிக்கும், சொல்– சொல்லும், பல அறி–பல பொருள்களைக் குறிக்கும், சொல்–சொல்லும், என்று–என்று. அ இரு பால்-அந்த இரண்டு பால்களையும் குறிக்கும் சொற்கள், அஃறிணைய – உயர்வல்லாத அஃறிணைச் சொற்களாம். அஃறிணையில் ஒன்றன்பால் (ஒன்றைக்குறித்து வரும்) பலவின் பால் (பலவற்றைக் குறித்து வரும்) இருவகைப் பால்களும் அடங்கும்.

(வி. ரை) மேலே கண்ட மூன்று சூத்திரங்களாலும் அறியப்படுவன : ஆண்பால், பெண்பால், பலர்பால் [மக்கள்] இம் மூன்று பால்களும் உயர்திணைக்கு உரியன; ஒன்றன்பாலும், பலவின்பாலும் (உயிர் உள்ளனவும் உயிர் இல்லனவும்) அஃறிணைக்கு உரியன.

அ என்பது ஆ என நீண்டு ஆயிருபால் என வந்தது. இது வரை கூறியவற்றால் சொற்கள் திணை வகையால் உயர்திணைச் சொல், அஃறிணைக்குச் சொல் என இரு வகைப்படும். பால் வகையால், ஆண்பாற் சொல், பெண்பாற் சொல், பலர்பாற்சொல், ஒன்றன்பாற்சொல், பலவின்பாற் சொல் என ஐவகைப்படும் என்பது அறியவும்.

உயர்திணை — ஒழுக்கம் உடைய மக்கள்
அஃறிணை — ஒழுக்கம் எதிர்பார்க்கப்படாத உயிருள்ள நடப்பன, பறப்பன, ஊர்வன, நீர்வாழ்வன என்பனவும், உயிரில்லாத கல், மண், முதலியனவும் ஆகும்.

சூத்திரம் 4

பெண்மை சுட்டிய உயர்திணை மருங்கில்
ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவியும்
தெய்வம் சுட்டிய பெயர்நிலைக் கிளவியும்
இவ்வென அறியும் அந்தம் தமக்கு இலவே
உயர்திணை மருங்கில் பால்பிரிந்து இசைக்கும்.

(ப. உரை) உயர்திணை மருங்கில்-உயர்திணை இடத்து, ஆண்மை-ஆண்தன்மை, திரிந்த-குன்றிய, பெண்மை-பெண் தன்மை, சுட்டிய-குறித்த, பெயர்நிலைக் கிளவியும்-பெயரைக் குறிக்கும் சொல்லும், தெய்வம்-தெய்வத்தை, சுட்டிய-குறித்த, பெயர் நிலைக் கிளவியும்-பெயரைக் குறிக்கும் சொல்லும், இவ் என அறியும்-இன்னபாலைச் சார்ந்தன என்று அறியத்தக்க, அந்தம்-ஈறு(விகுதி)கள், தமக்குஇல-தமக்குரியனவாக இல்லையாம். உயர்திணை மருங்கில்-(அச்சொற்கள் குறிக்கும் பெயர்கள்) உயர்திணையிடத்து, பால் பிரிந்து-(அவ்வவற்றிற்கு உரிய) பாலாய் வேறுபட்டு, இசைக்கும்- வழங்கும்.

வி,உரை) ஆண்மை திரிந்த பெண்மை-ஆணாகப் பிறந்தும் ஆண்மை குன்றிப் பெண் தன்மை மிக்குள்ள பேடி. தெய்வம் சுட்டிய-தெய்வப் பெயர்கள் குறித்த பேடி, தெய்வம் ஆகிய பெயர்கள் இன்னதிணை, இன்னபால் என்று வெளிப்படையாக அறியுமாறு அவற்றின் ஈற்றெழுத்துக்கள் அமையவில்லை. அவன், அவள்-இவற்றின் இறுதி எழுத்துகளாகிய 'ன்', 'ள்' இரண்டும் முறையே உயர்திணை ஆண்பால், பெண்பால் என்பதைச் சுட்டுகின்றன. இவ்வாறு பேடி, தெய்வம் என்பன அமையவில்லை. அதனால் இவற்றை எப்பாலில் சேர்ப்பது என்பது கேள்வி. இவ்வாறு வரும் பெயர்கள் உயர்திணையின் பால்படும். உயர்திணைக்குரிய ஆண்பால், பெண்பால், பலர்பால் என்பனவற்றுள் அடங்கும். (எ டு) பேடன் வந்தான், பேடிவந்தாள், பேடர்வந்தனர் என்றும், தேவன் தோன்றினான், தேவி தோன்றினாள், தேவர் தோன்றினர் என்றும் பால் மாறுபட்டு வழங்கும்.

குறிப்பு : பெண்ணாகப் பிறந்தும் பெண்மைகுன்றி ஆண்மை மிக்கிருப்பின் பேடன்; ஆணாகப் பிறந்தும் ஆண்மை குன்றிப் பெண்மை மிக்கிருப்பின் பேடி. ஆணா, பெண்ணா என்று வேறு படுத்தத்தக்க உடல் உறுப்புக்கள் அமையாததும், புணர்ச்சி உணர்ச்சியே இல்லாது இருப்பதும் அலி எனப்படும்.

சூத்திரம் 5

உயர்திணை ஆண்பால் ஈறு

னஃகான் ஒற்றே ஆடூஉ அறிசொல்

(ப. உரை) ஆடூஉ-ஆண்மகனை, அறி-குறிக்கும், சொல்-சொல்லானது, ன-ன் என்னும், ஒற்று-மெய்யெழுத்தை ஈற்றில் பெற்றிருக்கும்.

(வி.உரை) கான்-சாரியை. ஏ-அசை (பொருளற்றது, ஓசை நயத்திற்காக அமைந்தது) ஒற்று, புள்ளி, மெய்-ஒரே பொருள். (எ.டு.) கண்ணன் உண்டான்.

சூத்திரம் 6

உயர்திணைப் பெண்பால் ஈறு

ளஃகான் ஒற்றே மகடூஉ அறிசொல்

(ப. உரை) மகடூஉ-பெண்மகளை, அறி-குறிக்கும், சொல்- சொல்லானது. ள-ள் என்னும், ஒற்று-மெய்யெழுத்தை ஈற்றில் பெற்றிருக்கும்.

(வி.உரை) கான்-சாரியை. ஏ-அசை [எ.டு] மகள் சென்றாள்.

சூத்திரம் 7

உயர்திணைப் பலர்பால் ஈறுகள்

ரஃகான் ஒற்றும் பகர இறுதியும்
மாரைக் கிளவி உளப்பட மூன்றும்
நேரத் தோன்றும் பலரறி சொல்லே.

(ப. உரை) ரஃகான் ஒற்றும் - 'ர்' என்னும் மெய்யெழுத்தும், பகர இறுதியும்- 'ப' என்னும் இறுதிஎழுத்தும், மாரை கிளவியும்—'மார்' என்னும் சொல்லும், உளப்பட மூன்றும்-உள்ளிட்ட மூன்றும் (ர், ப், மார்), நேரத்தோன்றும்-பொருந்தத்தோன்றும், பலர் அறி- பலரைக் குறிக்கும், சொல்-சொற்களாம்.

(வி.உரை) ரஃகான் ஒற்று - 'ர்' என்னும் மெய்யெழுத்து. பகர இறுதி-இறுதியில் நிற்கும் 'ப' என்னும் உயிர்மெய்யெழுத்து. மார்-ஓர் இடைச்சொல். இதுவும் சொல்லின் இறுதியில் நிற்பது. [எ. டு] உண்டனர், உண்கின்றனர், உண்பார் எனவும், உண்ப, என்ப (வினைமுற்றுக்கள்) எனவும், கொண்மார், சென்மார் (வினை எச்சங்கள்) எனவும் வரும்.

சூத்திரம் 8

அஃறிணை ஒன்றன்பால் ஈறுகள்

ஒன்றறி கிளவி தறட ஊர்ந்த
குன்றிய லுகரத்து இறுதி ஆகும்.

(ப. ரை) ஒன்று அறி-(அஃறிணையில்) ஒன்றன்பாலை உணர்த்தும். கிளவி - சொற்கள், தறட - த், ட், ற், ஆகிய ஒற்றெழுத்துக்களின் மேல், ஊர்ந்த- ஏறிய. குன்றிய லுகரத்து - குற்றியலுகரத்தினை இறுதியில் உடையனவாம்.

(வி. ரை) தடற ஊர்ந்த உகரம்- த், ட், ற், இவற்றின்மேல் ஏறி வரும் உகரம், அதாவது, த்+உ=து, ட்+உ=டு, ற்+உ=று (து,டு,று) ஆகிய மூன்று எழுத்துக்களை இறுதியில் உடைய சொற்களாம். (எ.டு) நின்றது, கூவிற்று, உண்டு, பொருட்டு (பொருளையுடையது). இவ்வினைமுற்றுக்களின் இறுதியில் முறையே து,று,டு, வந்தவாறு கண்டுகொள்க. குன்றியலுகரம் - குற்றியலுகரம். அதாவது தன் ஒரு மாத்திரையில் குறுகி ஒலிக்கும் 'உ' என்னும் உயிர்க்குறில்.

சூத்திரம் 9

அஃறிணைப் பலவின்பால் ஈறுகள்

அ ஆ வ என வரூஉம் இறுதி
அப்பால் மூன்றே பலவறி சொல்லே

(ப. ரை) பல அறி சொல்-பலவற்றைக் குறிக்கும் சொற்கள் அ, ஆ, வ என- அ, ஆ, வ என்று வரூஉம்-வருகிற, இறுதி- ஈற்றெழுத்துக்களை உடைய, அப்பால்-அவ்வகையான, மூன்று-மூன்றாகும்.

(வி. ரை) பல பொருள்களைக் குறித்து வரும் வினைமுற்றுக்களின் இறுதியில் அ, ஆ, வ என்னும் மூன்று எழுத்துக்கள் நிற்கும். [எ.டு] உண்டன [அ], உண்ணா [ஆ], உண்குவ [வ]. வரும் என்னும் சொல் வரூஉம் என அளபெடுத்தது (இசை நிறை அளபெடை), ஏ-அசை

சூத்திரம் 10

மேலேகண்ட இறுதி எழுத்துக்கள் வினைச்சொல்லில் நிற்கும்

இருதிணை மருங்கில் ஐம்பால் அறிய
ஈற்றில் நின்று இசைக்கும் பதினோரெழுத்தும்
தோற்றம் தாமே வினையொடு வருமே.

(ப உரை) இருதிணை மருங்கில்-உயர்திணை, அஃறிணை என்னும் இரு திணைக்குரிய, ஐம்பால் - ஆண், பெண், பலர், ஒன்று, பல என்னும் ஐந்து பால்களையும், அறிய-குறிக்க, ஈற்றில் நின்று - சொல்லின் இறுதியில் அமைந்து, இசைக்கும்-ஒலிக்கும், பதினோர் எழுத்தும்-பதினொர் எழுத்துக்களும், தோற்றம் தாம்—தோன்றும் போது, வினையொடு வரும்-வினைச்சொல்லின் இறுதி எழுத்துக்களாய் வரும்.

(வி உரை) பதினோர் எழுத்து- ன், ள், ர், ப, மார், து, று, டு, அ, ஆ, வ என்னும் 11 எழுத்துக்கள். இவை 5 முதல் 9 முடிய உள்ள சூத்திரங்களில் காட்டப்பெற்றன. இவ்வெழுத்துக்கள் வினைமுற்றுக்களின் இறுதியில் நிற்கும் என்றாலும் சிறுபான்மை பெயர்களின் ஈற்றிலும் நிற்கும். ஏ-அசை.

சூத்திரம் 11

பெயரும் வினையும் மயங்கல் கூடா

வினயில் தோன்றும் பாலறி கிளவியும்
பெயரில் தோன்றும் பாலறி கிளவியும்
மயங்கல் கூடா தம்மர பினவே.

(ப. உரை) வினையில் தோன்றும்—வினை முற்றுக்களின் இறுதியில் நிற்கும், பால்அறி கிளவியும்-பாலினைக் காட்டும் எழுத்துக்களையுடைய சொல்லும், பெயரில் தோன்றும்-பெயர்களின் இறுதியில் நிற்கும் எழுத்துக்களையுடைய சொல்லும், மயங்கல் கூடா-ஒரு பால்உணர்த்தும் சொல் பிறிதொருபால் உணர்த்தும் சொல்லோடு கலந்து வருதல் கூடாது. தம்மரபின்-தத்தமது பாற்சொல் லோடுதான் பொருந்திவரும்.

(வி. உரை) மேற்சூத்திரங்களில் விரிவாகக் கூறப்பட்ட பாலுணர்த்தும் இறுதி எழுத்துக்கள் பதினொன்றையும் பெற்று வரும் வினைமுற்றுக்களும் பெயர்களும் அவ்வவற்குரிய

பால் உணர்த்தும் சொற்களோடு தான் இயைந்து வரும். (எ.டு.) கண்ணன் நடந்தான், வள்ளி நடந்தாள். வீரர் நடந்தனர், என ஆண், பெண், பலர்பால் (உயர்திணை) உணர்த்தும் பெயர்கள் அவ்வப்பால் உணர்த்தும் வினை முற்றுக்களுடன் இயைந்தன. இவ்வாறு இயைந்து வாராமல் கண்ணன் நடந்தாள், வள்ளி நடந்தான் என வருதல் கூடாது அவ்வாறே அஃறிணையில் அது வந்தது, அவை வந்தன என ஒன்றன்பால் பலவின் பால் பெயர்களும் வினைகளும் பொருந்தி வந்தமை காண்க. அது வந்தான், அவை வந்தனர் எனப் பால்கள் முறைமாறி வருவது குற்றம்.

சூத்திரம் 12

பேடி என்னும் சொல் அமையும் வகை

ஆண்மை திரிந்த பெயர்நிலைக் கிளவி
ஆண்மை அறிசொற்கு ஆகுஇடன் இன்றே.

(ப. உரை) ஆண்மை திரிந்த-ஆண் தன்மை குன்றிய, பெயர் நிலைக் கிளவி-பேடி என்னும் பெயராகிய சொல். ஆண்மை அறிசொற்கு - ஆண் தன்மையை உணர்த்தும் வினைமுற்றுச் சொல்லுடன், ஆகு இடம் இன்று-பொருந்தி வருவதற்கு இடம் இல்லை (பொருந்தாது).

(வி.உரை) ஆண்மை குன்றிய பேடி என்னும் பெயர், அதற்குரிய பெண்பால் வினைமுற்றுடன்தான் பொருந்தி வரும். (எ.டு.) பேடி வந்தாள் (பேடி வந்தான் என்பது தவறு)

சூத்திரம் 13

கேள்வி-பதில் அமையும் விதம்

செப்பும் வினாவும் வழாஅல் ஓம்பல்

(ப. உரை) செப்பும்—விடையும் [பதில்], வினாவும்—கேள்வியும் வழா அல்—வழுவாது, ஓம்பல்—பேணவும்.

(வி.உரை) செப்பு—பதில், வினா – கேள்வி, வழாஅல் – அளபெடை (வழுவாமல், தவறாமல்) ஓம்பல் - ஓம்புக, போற்றுக (வியங்கோள் வினைமுற்று). அதாவது, கேள்வியும் பதிலும் ஒத்திருத்தல் வேண்டும். கண்ணா படித்தாயா? என்ற கேள்விக்குப் 'படித்தேன்' என்பது முறையான பதில்.

சூத்திரம் 14

செப்புப்பற்றிய மற்றொரு விளக்கம்

வினாவும் செப்பே வினாஎதிர் வரினே.

(ப. நை) வினாவும்–கேள்வியும், வினா எதிர்வரின்–எதிர்கேள்வி யாகவே பதில் வந்தாலும், செப்பு - கேள்விக்குரிய பதிலாகவே கொள்க.

(வி நை) ஒருவன் ஒரு கேள்வி கேட்டால், அதற்கு நேரான பதில் கூறாமல், அப்பதிலையே கேள்வி வடிவத்தில் கூறினா லும் அது பொருத்தமான விடையாகவே கருதவேண்டும்.

[எ.டு] கண்ணா தேர்வு எழுதினாயா? என்ற கேள்விக்கு எழுதி னேன் என்ற நேர்பதில் கூறாமல், தானும் ஒரு கேள்வி வடிவத்தில் எழுதேனோ?' என்று பதில் கூறினாலும் அதனையும் பதிலாகவே கொள்ளவேண்டும்.

சூத்திரம் 15

செப்பு வழுவாகாத நிலை

செப்பே வழீஇயினும் வரைநிலை இன்றே
அப்பொருள் புணர்ந்த கிளவி யான

(ப. நை) செப்பு – விடை, வழீஇயினும் - வழுவினாலும், அப் பொருள் - வழுவாத விடைப் பொருள், புணர்ந்த- அமைந்த, கிளவியான - சொல்லாக வருமாயின், வரை நிலை இன்று-நீக்கத்தக்கது இல்லை.

(வி.நை) செப்பு-பதில், வழீஇயினும்–அளபெடை, நேரானபதிலாக அமையாவிட்டாலும், பதில் கேள்விக்கு ஏற்ப நேர் பதிலாக அமையாவிட்டாலும். அதே பொருளைத் தரு மாயின் தவறில்லை; ஏற்றுக்கொள்ளலாம்.

[எ.டு] கண்ணா படித்தாயா? என்ற வினாவிற்கு 'படிக்க வில்லை' என்று நேர்விடை கூறாமல், 'கண்வலித்தது' என்று விடை கூறினும், வினாவிற்குரிய விடைப்பொருளை மறைமுகமாகத்தந்து நிற்றலின், அதனை ஏற்கவேண்டும்; நீக்கல் கூடாது.

சூத்திரம் 16

செப்பு, வினா இவற்றின் மரபு கூறுதல்

செப்பினும் வினாவினும் சினைமுதற் கிளவிக்கு
அப்பொரு ளாகும் உறழ்துணைப் பொருளே,

(ப. ரை) செப்பினும்-விடையிலும், வினாவினும்-வினாவிலும், சினை முதல் கிளவிக்கு-சினைச் சொல்லுக்கும் முதற் சொல்லுக்கும், உறழ் துணைப் பொருள்-உறழ்பொருளும் துணைப் பொருளும், அப்பொருள் ஆகும்-அந்தஅந்தப் பொருளுக்கு அந்த அந்தப் பொருளே ஆகும்.

(வி.ரை) செப்பு-பதில். வினா-கேள்வி. சினச்சொல்-உறுப்புப் பற்றி வரும் சொல். முதற்சொல்-முழுப்பொருள் பற்றி வரும்சொல். கிளவி-சொல், மரம்-முதற்பெயர், கிளை, இலை-சினைப் பெயர்கள் (சினை-உறுப்பு) உறழ்தல்-மாறுபடக்கூறுதல், துணைப்பொருள்-ஒப்புமை கூறுதல்.

பதில் கூறும் போதும், கேள்வி கேட்கும் போதும், முதல் பொருளுக்கு முதல் பொருளும், சினைப்பொருளுக்குச் சினைப் பொருளுமாகவே வழங்க வேண்டும். உறழ்ச்சியாயினும் ஒப்பாயினும் இம்முறையே மரபாகும். மாறிக்கூறல் குற்றமாகும்.

(எ.டு.) கோமதியின் கண்ணினும் திலகவதியின் கண் பெரியது-இது செப்பு; பெரியதோ?இது வினா. கோமதியின் கண்ணினும் அவள் காது அழகானது-செப்பு; அழகானதோ?. வினா. இவை சினைக்குச் சினையே வந்த உறழ்ச்சிப் பொருள்-

கண்ணனின் கோவிந்தன் பெரியன்-செப்பு. பெரியனோ?-வினா. காஞ்சியினும சென்னை பெரியது-செப்பு; பெரியதோ-வினா. இவை முதலுக்கு முதலே வந்த உறழ்ச்சிப்பொருள்,

இனித் துணைப்பொருளுக்கு எடுத்துக்காட்டு : கோமதியின் முகம் ஒக்கும் திலகவதியின் முகம்-செப்பு; ஒக்குமோ?-வினா. இது சினைக்குச்சினையே வந்த துணைப்பொருள். கண்ணனை ஒப்பான் கோவிந்தன-செப்பு; ஒப்பானோ?-வினா. இது முதலுக்குமுதலே வந்த துணைப்பொருள்.

இவ்வாறு முதல் பொருளுக்கு முதல் பொருளும், சினைப் பொருளுக்குச் சினைப் பொருளுமாக வாராமல் மாறி வருமாயின்

அது குற்றமாம். (எ.டு.) கோமதியின் கண்ணினும் திலகவதியின் உடல் அழகானது என்றும், கண்ணனின் கோவிந்தன் தோள் வலியது என்றும் முறையே சினைக்கு முதலும், முதலுக்குச் சினையுமாக மாறி வருமாயின் அது குற்றமாம். ஒப்புப்பொருளுக்கும் இவ்வாறே காண்க.

சூத்திரம் 17

மயங்கி வரும் இடம்

தகுதியும் வழக்கும் தழீஇயின ஒழுகும்
பகுதிக் கிளவி வரைநிலை இன்றே.

(ப. ரை) தகுதியும்-தகுதியையும், வழக்கும்-உலக வழக்கையும் தழீஇயின-பொருந்தி வரும், பகுதிக்கிளவி-பெயரின் ஒரு பகுதியாக வரும் அடைமொழி, வரைநிலை இன்று-நீக்கத்தக்கது அன்று (ஏற்றுக்கொள்ளல் வேண்டும்.)

(வி.ரை) வழக்கு என்பது நெடுங்காலமாக வழங்கி வருவது. இவ்வழக்கு இருவகைப்படும். ஒன்று, தகுதி வழக்கு; மற்றொன்று உலக வழக்கு. தகுதி வழக்கு-இவ்வாறு கூறுவது தகுதிக்கு ஏற்றதன்று என்று கருதி அதே பொருள் தருமாறு வேறு வகையாகக் கூறுதல்; (எ.டு.) செத்தான் என்று கூறுவதை விடத் துஞ்சினான் என்று கூறுவதும், மலங்கழுவினான் என்பதைக் கால்கழுவினான் என்று கூறுவதும் தகுதி வழக்கும்.

உலக வழக்கு-வழிவழியாக ஆளப்பட்டு வருவது. யாவர் என்பதனை யார் என்றும், அருமருந்தன்ன என்பதனை அருமந்த என்றும் கூறுவது உலக வழக்கு. இவ்வாறு கூறுவது வழுவமைதி எனப்படும். வழு (குற்றம்)வாயினும், வழுவமைதி (குணம்)யாக ஏற்கப்படும் என்பதாம். இவை வினா பற்றியும் விடை பற்றியும் வரும்.

சூத்திரம் 18

இனம் சுட்டாப் பொருள் மேல் வரும் அமைதீ

இனச்சுட்டு இல்லாப் பண்புகொள் பெயர்க்கொடை
வழக்காறு அல்ல செய்யுளாறே.

(ப. ரை) இனச்சுட்டு இல்லா-ஒரு பொருளுக்கு இனம் சுட்ட முடியாத, பண்பு கொள்-பண்பினை (இயல்பினை)க் கொண்டுள்ள, பெயர்க் கொடை-பெயரைக் கொடுத்தல், வழக்காறு அல்ல-உலக வழக்குகள் அல்ல, செய்யுள் ஆறு-செய்யுள் வழக்குகளாம்.

(வி.ரை) சுட்டு-குறிக்கப்படுதல், பண்பு-இயல்பு, குணம், கொடை – கொடுத்தல், பெயர்க்கொடை - பெயரிட்டு வழங்குதல். செய்யுள் வழக்கில் (இலக்கியத்தில்) சூரியனும் சந்திரனும் முறையே செஞ்ஞாயிறு, வெண்திங்கள் என்று சுட்டப்படுகின்றன. சூரியனுக்கும் சந்திரனுக்கும் இனமான வேறு பொருள் இல்லை. தனக்கு இனமுள்ள ஒரு பொருளைத்தான் பொதுவானவற்றிலிருந்து பிரித்துக் காட்ட, அப்பொருளுக்கு முன்னர் அடைமொழி கொடுத்து வழங்குதல் இயல்பு.

தாமரையைச் செந்தாமரை என்று குறிப்பிடுவது அதன் இனமான வெண் தாமரையும் உள்ளதால்தான். இனம் சுட்டக்கூடிய பொருளைப் பண்பு கொடுத்துப் பேசுதல் உலக வழக்கு, செய்யுள் வழக்கு இரண்டிலும் உண்டு. இனம் சுட்டாத பொருளைப் பண்புகொடுத்துப் பேசுவது இலக்கியத்தில் மட்டுதான் உண்டு. இவ்வேறுபாடு காணத்தகும்.

வழக்காறு அல்ல என்ற சொற்றொடரில் அல்ல என்பது பன்மை வினைமுற்று. வழக்காறு என்பது ஒருமை சுட்டும் அஃறிணைப் பெயர், வினைமுற்று பன்மையில் உள்ளதால் வழக்காறு என்பதற்கு வழக்காறுகள் (நெறிகள்) எனப் பன்மைப்பொருள் கொள்ளப்பட்டது.

நூத்திரம் 19

இயற்கைப் பொருள்

இயற்கைப் பொருளை இற்றெனக் கிளத்தல்.

(ப. ரை) இயற்கைப் பொருளை-இயல்பான ஒரு பொருளை இற்று என–இத்தன்மையது என்று, கிளைத்தல்-கூறுக.

(வி.ரை) பொருள்கள் இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என இருவகைப்படும். மண், காற்று, தீ முதலியன

இயற்கைப பொருள்கள். இவை மனிதனால் செய்யப் படாதவை. இப்பொருள்கள் தோன்றும் போதே அவற் றின் இயல்புகளும் உடன் தோன்றியனவாம். செயற் கைப்பொருள்கள் மனிதனால் உண்டாக்கப்பட்டவை. இவற்றிற்குச் செயற்கையான இயல்புகளே உண்டு. மூலப்பொருளிலிருந்து செய்யப்படுவன எல்லாம் செயற் கைப்பொருள்களேயாம். ஆடை, ஆபரணம்போன்றவை. இற்று-இன்னதன்மையானது (குறிப்பு வினைமுற்று.)

கிளத்தல்-கூறுக. (வியங்கோள் வினைமுற்று.) (எ.டு.) மண் வலிது (வன்மையானது), காற்று வீசும், தீ சுடும்,- இங்கு வன்மையும், வீசுதலும், சுடுதலும் இயல்பான தன்மைகளாம். எனவே இவற்றை உள்ளவாறே கூறல் வேண்டும். தீ சுடுவதாயிற்று, காற்று வீசுவதாயிற்று என்று ஆக்கச்சொல் கொடுத்துக்கூறினால், தீயும் காற்றும் செயற்கையாக அத்தன்மைகளைப் பெற்றன எனப்பொருந்தாத பொருள் தந்துவிடும்.

இனி, குடம், ஆடை முதலியன செயற்கைப்பொருள் களாம். எனவே, இவற்றைக் கூறும் போது ஆக்கம் கொடுத்துக் கூறல் வேண்டும். (எ.டு.) மண் குடம் ஆயிற்று. நூல் ஆடை ஆயிற்று என வழங்கப்படும்.

சூத்திரம் 20

செயற்கைப் பொருள்

செயற்கைப் பொருளை ஆக்கமொடு கூறல்

(ப. ரை) செயற்கைப் பொருளை – செயற்கையான பொருளை ஆக்கமொடு–ஆக்கச் சொல் கொடுத்து, கூறல்-கூறுக.

(வி.ரை) ஆக்கச்சொல்–ஆயிற்று. ஆனது என்று கூறுதல். ஆடை ஆயிற்று, ஆபரணம் ஆனது என்பது போன்று. முன் சூத்திர உரையில் காட்டியது போல நூல் ஆடை ஆயிற்று, பொன் ஆபரணம் ஆனது என்று கூறல் வேண்டும்.

பயிர் செழிப்பதாயிற்று, தலைமயிர் கருமையாயிற்று, என்று ஆக்கம் கொடுத்துக் கூறுக என்பது இச்சூத்திரக் கருத்து.

சூத்திரம் 21

மேலும் ஒரு முடிவு

ஆக்கம் தானே காரணம் முதற்றே

(ப. ரை) ஆக்கம் தான்-ஆக்கச் சொல்லும், காரணம் முதற்று-காரணத்தை முதலில் பெற்று வரும்.

(வி.ரை) காரணம்-காரியத்திற்கு முந்தியது. முதற்று - முதலில் வருவது. காரணத்தை முதலில் கூறிப் பின்னர் ஆக்கச் சொல் கூறல்வேண்டும் என்பதாம், பயிர் செழிப்பதற் குரிய காரணம் மழை பெய்தல் முதலியனவாம். எனவே மழை பெய்தமையால் பயிர் செழிப்பதாயிற்று என்று கூறல் வேண்டும் என்பது இச்சூத்திரத்தின் கருத்து.

சூத்திரம் 22

விதி விலக்கு

ஆக்கக் கிளவி காரணம் இன்றியும்
போக்கின்று என்ப வழக்கி னுள்ளே.

(ப. ரை) ஆக்கக்கிளவி-ஆக்கச் சொல், வழக்கினுள்-உலக வழக்கில், காரணம் இன்றியும்-காரணத்தை முன்னர்க் கூறாத போதும், போக்கு இன்று-போக்குவது இல்லை (வரும்).

(வி.ரை) முன்சூத்திரத்தில் ஆக்கச்சொல் காரணம் கூறிய பின்னரே வருதல் வேண்டும் என விதிக்கப்பட்டது. ஆனால் இச்சூத்திரம் அதனை விலக்குகிறது. இது புறனடை எனப்படும். அதாவது உலக வழக்கில் அல்லது அன்றாடப் பேச்சு வழக்கில் கூறும்போது செயற்கைப் பொருள் ஆக்கச் சொல் இல்லாமலும் கூறப்படலாம். போக்கு + இன்று = போக்கின்று: போதல் இன்று, அதாவது, வரும் என்பது பொருள்.

(தொடரும்)

காந்தியடிகளும் சமுதாயச் சீர்திருத்தமும்

—பேரறிஞர். அ. மா. பரிமணம்

ஓர் இளைஞர், புகைவண்டி முதல் வகுப்பில் பயணம் செய்கிறார். அந்தப் பெட்டியில் ஒரு வெள்ளைக்காரர் ஏறுகிறார்; வெள்ளையர் அல்லாதவர் அங்கு இருப்பதைக் கண்டு அருவருப்புக் கொள்கிறார். பயணச் சீட்டு வாங்கியிருந்தும், பரிசோதகர், அந்த இளைஞரைக் காவலர் துணையோடு வண்டியிலிருந்து புகீழே தள்ளி விட்டு. அவருடைய பொருட்களையும் வெளியே வீசிவிடுகிறார். இளைஞரோ. பயணியர் தங்குமிடம் சென்று, கடுங் குளிரில் இரவைக் கழிக்க நேர்ந்தது!

குதிரைகள் பூட்டிய 'கோச்சு' வண்டியில் செல்வதற்குப் பயணச் சீட்டு வாங்கியுள்ள ஓர் இளைஞர். அந்த வண்டியில், வெள்ளையரோடு உடனமர்ந்து பயணம் செய்ய முடியவில்லை. காரணம், அந்த இளைஞர் வெள்ளைக்காரர் அல்லர் என்பது தான். வண்டியோட்டிக்குப் பக்கத்தில் அமர்ந்து பயணம் செய்த இளைஞரை. வண்டியின் தலைவன் பயணிகள் ஏறும் படிக்கட்டில் உட்காரும்படி கூறினான். அங்கு அமர மறுத்த இளைஞரை, அந்த வெள்ளையன் பலமாக அறைந்து விடுகிறான். அறையோடு அவமானத்தையும் தாங்கி, இளைஞர் தப்பயணத்தைத் தொடர்ந்தார்.

ஆட்சித் தலைவர் வசிக்கும் இல்லத்தின் வாசலில், பாராக்காரன் காவலில் நிற்கிறான். அந்த வழியாகத் தெருவில் நடந்து சென்ற இளைஞரை, வெள்ளைக்காரக் காவலன், எந்த அறிவிப்பும் செய்யாமல், உதைத்துத் தள்ளி, மேலும் துன்புறுத்த முற்பட்டான்- நல்ல வேளையாக அந்தப்பக்கம்வந்த, வெள்ளை அதிகாரி ஒருவர் உதவியால், இளைஞர், தமது இல்லம் சென்றடைந்தார். தவறு செய்த காவலன் மீது, வழக்குத் தொடுக்குமாறு அந்த அதிகாரி கூறியும், இளைஞர் மறுத்துவிட்டார்.

இந்த மூன்று நிகழ்ச்சிகளிலும் இடம் பெற்று, அடி உதைகளுக்கு ஆளாகிய இளைஞர் ஒருவரேயாவார்.

இந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் தென்னாப்பிரிக்காவில் நடைபெற்றன. இதற்கெல்லாம் காரணம், அந்த இளைஞர், வெள்ளைக்காரர் அல்லர் என்பதுதான். 'வெள்ளையருக்கு ஒரு நீதி வேறு நிறத்தவருக்கு ஒரு நீதி' என்பதுதான் அன்று, அந்நாட்டின், நடைமுறைச் சட்டமாக இருந்தது.

அந்த இளைஞர் இங்கிலாந்தில் படித்துப் பாரிஸ்டர் பட்டம் பெற்ற ஒரு பட்டதாரி!-வழக்கறிஞர்-ஆனால் இந்தியர்!

யாராக இருந்தாலென்ன? வெள்ளையர் அல்லாதாரைக் கறுப்பராகவே கருதினர், வெள்ளையர்! அதன் விளைவே, அந்த இளைஞர் அடைந்த அல்லல்களும் அவமானங்களும்!

நிறவெறியால் வேதனைக்காளான, அந்த இந்திய இளைஞர் வேறு யாருமல்லர், பிற்காலத்தில், 'உலக உத்தமர்' என்றும், 'மனிதருள் மாணிக்கம்' என்றும், 'பாரதத்தின் தந்தை' என்றும் புகழப் பெற்ற காந்தியடிகளே யாவார்!

'ஆங்கிலப் பேரரசில் ஆதவன் மறைவதே இல்லை என்று ஆணவம் பேசிய வெள்ளை ஏகாதிபத்தியத்தின் வெறிச்செயல்களைக் கண்டு இளைஞர் காந்தி தம் உள்ளம் தளர்ந்தாரலர். மாறாக, அந்தக் கொடுமைகளை எதிர்த்து நிற்கும் உறுதி கொண்டார்; உரம் பெற்றார்.

தென்னாப்பிரிக்காவில், இந்திய வணிகர் ஒருவருடைய வழக்கில் உதவுவதற்காக, ஓராண்டுக்கால ஒப்பந்தத்தில் சென்ற காந்தியடிகள், அங்கு நடைபெற்ற, நிறவெறிக் கொடுமைகளை எதிர்த்துப் போராடும் உறுதியோடு, மீண்டும் தென்னாப்பிரிக்கா சென்று, ஏறத்தாழ இருபது ஆண்டுகட்கு மேலாக அறப்போராட்டம் நிகழ்த்தி, அதில் வெற்றியும் கண்டார்,

இளைய வழக்கறிஞராகத் தென்னாப்பிரிக்கா சென்ற காந்தி, திறமை மிக்க வழக்கறிஞராக, சத்தியத்தையும் அகிம்சையையும் வாழ்வின் அடி நாதமாகக் கொண்டவராக, மகாத்மாவாக இந்தியா திரும்பினார்.

அடிகளின் தென்னாப்பிரிக்க வாழ்க்கை, அவர் செய்த சத்திய சோதனைக்கான பயிற்சிக்களமாக அமைந்தது; அதற்குப் பின்னர் அவரது இந்திய வாழ்க்கை, இந்தியாவின் விடுதலைக்கான முயற்சிக்களமாகவும் அமைந்தது.

அந்தக் காலத்தில், தென்னாப்பிரிக்காவும் இந்தியாவும் ஆங்கில ஏகாதிபத்தியத்திற்கு ஆட்பட்ட நாடுகளாக இருந்தன. அந்த, ஏகாதிபத்தியக் கொடுமையை எதிர்த்த காந்தியடிகளுக்கு, இரண்டு நாட்டுச் சிறைக் கூடங்களும் அவ்வப்போது தங்கு மிடங்களாயின; அவருடைய கொள்கைகளை உறுதிப்படுத்திய தவச்சாலைகளும் ஆயின.

'மனிதன் எங்கும் யார்க்கும் அடிமைப்படவோ, யாரையும் அடிமைப் படுத்தவோ கூடாது' என்பது அடிகளின் கோட் பாடாகும்.

அதனால்தான், சட்டங்களை மதித்து வாழக் கற்ற காந்தியடிகள், மனித உரிமைக்கு—விடுதலைக்கு—மாறாக அமைந்த போது, அவற்றை எதிர்த்து அறவழியில் போராட முற்பட்டார்.

காந்தியடிகள், முதன்முறையாகத் தென்னாப்பிரிக்க நீதி மன்றத்துக்குச் சென்று, தமக்குரிய இருக்கையில் அமர்ந்திருந்தார். அவரைக் கூர்ந்து நோக்கிய நீதிபதி, அவர் அணிந்திருந்த தலைப்பாகையை அகற்றி விடுமாறு ஆணையிட்டார். அடிகள் தம் தலைப்பாகையை அகற்ற விரும்பாமல், நீதி மன்றத்தை விட்டு வெளியேறி விட்டார்.

அந்த நாட்டு நீதி மன்றங்களில், இந்து சமயத்தவர், தலைப்பாகை அணிவதற்கு உரிமையில்லை என்னும் நிலையை அறிந்த காந்தியடிகள், அது, இந்தியருக்கு இழைக்கப்படும் அரசியல் அநீதி என்று எண்ணினார். 'தாம் நீதி மன்றத்தில் தலைப்பாகை அணிவது சரியான செயலே' என்பதனை விளக்கிப் பத்திரிகைகளில் வெளியிட்டு அதில் வெற்றியும் பெற்றார்.

அந்தச் செயலால், நீதிமன்றத்தில் நீதிபதியின் ஆணையை மதித்துச் செயற்பட்ட கடமையுணர்வும், நீதிபதியின் நியாயமற்ற ஆணையை எதிர்த்து வென்ற உரிமையுணர்வும் காந்தியடிகளிடம் ஒருங்கே விளங்கியதை உணரலாம். 'பாவங்களை வெறு; பாவிகளை வெறுக்காதே' (Hate the sin and not the Sinner) என்னும் சமய அறக்கோட்பாட்டினைத் தம் சொந்த வாழ்க்கையிலும் அரசியல் வாழ்க்கையிலும் கடைப்பிடித்து வந்தார். அதனால், கொடுமை களை எதிர்த்த அடிகள், அவற்றைச் செய்த கொடியவர்களை வெறுக்காமல் என்றும் அன்பு காட்டினார்.

வெறித்தனம் மிக்க அசுர பலத்தை, அடிகள் தமது ஆன்ம பலத்தால் எதிர்த்துப் போராடினார். இறுதியில், அடிகளின் ஆன்மபலம், அசுர பலத்தை வென்று விட்டது. அதன் விளைவாக அந்த நாட்டில் ஆங்கிலேய அரசு அடிகளோடு ஓர் அரசியல் ஒப்பந்தம் செய்து கொண்டது.

இந்தியர் சிலர் அதற்கு உடன்படாமல், அடிகளை எதிர்த்தனர். அவர்களுள் ஒரு முரடன், காந்தியடிகளைக் குறுந் தடியால் தாக்கிவிட்டான்; உதடு கிழிந்தது; பற்கள் உதிர்ந்தன.

மருத்துவமனையில், மயக்கம் தெளிந்து, உணர்வு திரும்பிய நிலையில், காவலர்களால் கைது செய்யப்பட்ட அடிகள் அந்தப் பாதகர்களை விடுவிக்குமாறு வேண்டிக் கொண்டார்.

தென்னாப்பிரிக்காவில், இந்தியர்க்குக் கொடுமை பல புரிந்த தளபதி சுமட்சு என்பவரை அடிகள் வெறுக்காமல் அன்பு காட்டினார். தம் அன்பின் அடையாளமாகத் தாமே தம்கையாற் செய்த, உயர்ந்த காலணிகளைப் பரிசாக வழங்கினார்.

இந்தியா திரும்பிய காந்தியடிகள், அதன் விடுதலைக்காக ஆங்கில ஆட்சியை எதிர்த்து, அறவழியில் போராட முற்பட்டார். பஞ்சாபில் சாலியன் வாலாபாகு என்னுமிடத்தில், ஆங்கில ஆட்சி நிகழ்த்திய துப்பாக்கிச் சூடு, அவர்கள் செய்த கொடுமைகளின் கொடு முடியாக அமைந்தது. தலைவர்களின் பேச்சைக் கேட்க அமைதியாகக் கூடியிருந்த கூட்டத்தினைச் சுடுமாறு இராணுவத் தளபதி டயர் என்பவன் கட்டளையிட்டான். எதிர்பாராத துப் பாக்கிச்சூட்டினால் பொதுமக்கள் நூற்றுக்கணக்கில் இறந்தனர்; ஆயிரக்கணக்கில் காயமுற்றனர்.

விசாரணையின் போது, ''இன்னும் அதிக தோட்டாக்கள் கைவசமிருந்தால். இன்னும் அதிக நேரம் சுட்டிருப்பேன்'' என்று தளபதி டயர் ஆணவத்துடன் கூறினான்.

செய்தி அறிந்து, இந்தியா கொதித்தெழுந்தது; உலகம் திகைத்து நின்றது. மனிதநேயமிக்க ஆங்கிலேயர்களும் அப் படுகொலையைக் கண்டித்தனர்; கண்ணீர் வடித்தனர். இந்தியத் தலைவர்கள் அனைவரும் டயரைத் தூக்கிலிடவேண்டும் என்று கண்டனக் குரல் எழுப்பினர்.

காந்தியடிகளின் உள்ளம், 'அந்தக் கொடியவனைத் தூக்கி லிட வேண்டியதில்லை; பணியிலிருந்து நீக்கிவிட்டால் போதும். என்று கருதியது.

ஏறத்தாழ முப்பது ஆண்டுக்காலம். அடிகளின் தலைமையில் நிகழ்ந்த அறப்போராட்டங்களால் 1947ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 15 ஆம் நாள் இந்தியா விடுதலை பெற்றது. பாரத அன்னையின் மணிக்கொடி, இந்திய வானில் பட்டொளி வீசிப் பறக்கத் தொடங்கியது.

இந்தியா விடுதலை அடைந்து ஆறு மாதங்கள்கூட ஆக வில்லை. அதற்குள்.

1948-ஆம் ஆண்டு சனவரித் திங்கள்; 30 ஆம் நாள், வெள்ளிக்கிழமை மாலை 5 மணி ஆகியிருக்கும்.

தில்லி மாநகரத்திலுள்ள பிர்லா மாளிகையில், வழக்கமான வழிபாட்டுக் கூட்டத்துக்கு அடிகள் சென்று, மேடைப் படிகளில் ஏற முற்பட்டார். திடீரெனத் துப்பாக்கி வெடிச் சத்தம் வானைப் பிளந்தது. அடிகளின் திருவாய் 'ஹே ராம்' என்று ஒலித்தது. அவரது புனிதஉடல் தரையில் சாய்ந்தது!

அருள்மலை சாய்ந்து விட்டது; அண்ணல் காந்தி அமரரா னார்! இந்தியா இருளில் மூழ்கியது; உலகமே கண்ணீர் வடித்தது.

சாக்ரடீசுக்கு நச்சுக்கோப்பையும், இயேசு நாதருக்குச் சிலு வையும் போல, காந்தியடிகளுக்குத் துப்பாக்கிக்குண்டு பரிசா கியது!

அண்ணல் காந்தி அமரரானபோது, வானொலியில் அறிஞர் ஒருவர் ஆற்றிய இரங்கல் உரையின் பகுதிகள், நினைவு கூரத் தக்கன. அவை வருமாறு :-

''நாம் அரசுரிமை இழந்திருந்தபோது அவர் பிறந்தார்; அவர் மறையும்போது அரசுரிமை பெற்று வாழ்கிறோம்.''

''அவர் பிறந்தபோது நமது நாடு, இழிவும் பழியும் தாங்கிய நாடாக இருந்தது. அவர் மறைந்திடுவதற்கு முன்னம், மாஸ்கோவி லிருந்து நியூயார்க்கு வரையிலேயுள்ள சகல நாடுகளிலும், நமது விடுதலையை விளக்கும் விருது பெற்றுத் தூதுவர்களும் பிரதிநிதி களும் அமர்ந்திருக்கும் நிலை உண்டாகிவிட்டது.''

''அவர் பிறந்தபோது, உலக மன்றத்திலே, நமக்கு இடம் கிடையாது. இன்று, நாம் இருந்தால் உலக மன்றத்திலே புதியதோர் பலம்'' என்று பல நாடுகள் எண்ணும் நிலை ஏற்பட்டு விட்டது.

அவர் பிறந்தபோது இங்குத் தேவைப்படும் எந்தப் பொருளுக்கும் வெளி நாட்டின் தயவை நாடி ஏங்கிக் கிடந்தோம். இன்று வெளி நாடுகள் நமது சரக்குகளைப் பெற, நம்முடன் ஒப்பந்தங்களைச் செய்து கொள்வதற்குத் தமது இராசதந்திரத்தை உபயோகிக்கும் அளவு மாறுதலைக் காண்கிறோம்.''

சத்தியத்தையும் அகிம்சையையும் ஆயுதங்களாகக் கொண்ட அடிகளின் போராட்டத்திற்குப் பாரதத்தின் அனைத்துப் பட்டி தொட்டிகளும் பட்டணங்களும் வீரர்களை அனுப்பும் பாசறைகளாயின.

இந்துக்கள், இசுலாமியர், சீக்கியர், கிறித்துவர் என்னும் சமய பேதங்களோ, உயர்ந்தவர், தாழ்ந்தவர் என்னும் சாதி பேதங்களோ இல்லாமல் அனைவரும் ஒன்றுபட்டுக் கூடிய கூடாரமாக அடிகளின் தலைமை விளங்கியது.

இந்திய விடுதலைப் போராட்டத்தில் அடிகள் ஈடுபடு வதற்கு முன்னரே, ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போராடும் முயற்சியில் பலர் ஈடுபட்டிருந்தனர். அவர்களின் விடுதலை முயற்சி கள் பாரதத்தின் பலவிடங்களிலும், பரவலாகச் சிதறுண்ட நிலையில் அமைந்தன. சாதி சமய பேதங்களால் அவ்வப் போது பிளவு களும் தளர்வுகளும் ஏற்பட்டன. சிற்சில சமயங்களில் வன்முறை தலை தூக்கியதும் உண்டு.

அந்த நிலையில் அடிகளின் தலைமை, விடுதலையை விரும்பி முயன்ற சக்திகள் அனைத்தையும் ஒன்று திரட்டி

விடுதலைப் போராட்ட வேள்வியில் ஈடுபடச் செய்தது.

அடிகள்பால் அமைந்திருந்த இந்த அற்புத ஆற்றலை வியந்த ஓர் அறிஞர், ''காந்தியடிகளின் கைவசமாக ஒருதங்கத் திறவுகோல் இருந்தது. அது எல்லா இதயக் கதவுகளையும் திறக்கவல்ல தனிப்பெரும் தன்மை கொண்டது. அதன் பெயர் அகிம்சை'' என்று கூறிப் போற்றியுள்ளார்.

காந்தியடிகளின் இந்த மகோன்னத சக்தியைத், தம் தீர்க்க தரிசன உணர்வால் முன்னரே உணர்ந்து கொண்ட மகாகவி பாரதியார் அடிகளை,

''வாழ்க நீ எம்மான், இந்த
வையத்து நாட்டில் எல்லாம்,
தாழ்வுற்று வறுமை மிஞ்சி.
விடுதலை தவறிக் கெட்டுப்
பாழ்பட்டு நின்றி தா மோர்
பாரத தேசம் தன்னை,
வாழ்விக்க வந்த காந்தி
மகாத்மா, நீ வாழ்க வாழ்க''

என்று வாழ்த்தினார்.

பாரதியின் தீர்க்க தரிசனம் ஏறத்தாழ இருபத்தைந்து ஆண்டுகளில் உண்மையாகியது. 194।-ஆம் ஆண்டு இந்தியா விடுதலை பெற்றது.

மகான்கள் எனப்படும் அருளாளர்கள் தோன்றும் போது அற்புதங்கள் நிகழும் என்று கூறுவார்கள். புத்தர், இயேசு போன்றவர்கள் தோன்றிய போது, அதனை அறிவிக்கும் அறிகுறிகள் அவனியில் உண்டாயின என்று வரலாறுகள் கூறுகின்றன.

ஆனால், மகாவீரர், புத்தர், இயேசு. நபிகள் நாயகம் போன்ற அருளாளர்கள் நெறிகளின் அடிப்படையிய் வாழ்ந்த, காந்தியடிகள் பிறந்த போது அதிசயங்கள் ஒன்றும் நிகழவில்லை.

எளிய, ஆனால் நெறி தவறாமல் நேர்மையோடு வாழ்ந்த. ஒரு குடும்பத்தில், தாம் பிறந்த சூழலை அடிகள் தம் சத்திய

சோதனையில் விளக்கியுள்ளார். நேர்மை, அஞ்சாமை, சத்திய வேட்கை, சமயமூலம் போன்ற பண்புகளையே அடிகள் தம்பெற்றோரிடமிருந்து உடமைகளாகப் பெற்றிருந்தார்.

'மது, மாமிசம், மங்கை ஆகிய மூன்றையும் தொடவே மாட்டேன்' என்று தம் அன்னையிடம் பிரமாணம் செய்து விட்டுச் சட்டக்கல்வி பெற அடிகள் இங்கிலாந்து சென்றார். அரும்பாடு பட்டு அந்த மூன்று பிரமாணங்களையும் நிறைவேற்றிப் பாரிஸ்டராகக் காந்தி, இந்தியா திரும்பிய போது, அந்தக் காட்சியைக் காண, அன்னை உயிரோடு இல்லை! அன்னைக்குக் கொடுத்த, அந்த மூன்று வாக்குறுதிகளையும், அடிகள், தம் ஆயுட்காலம் முடியும்வரை காப்பாற்றி வந்தார்.

இம்சையைச் சாத்விக முறையில், அகிம்சையால் எதிர்த்து வென்ற காந்தியடிகள், வன்முறை நிறைந்த இந்த உலகத்திற்குப் புதியதோர் போர் முறையைக் காட்டினார். அதற்குச் சத்தியாக்கிரகம் என்று பெயரும் சூட்டினார். அந்தச் சொல்லும் பொருளும், அடிகள் உலகிற்களித்த புதுமையாகும். அதன் ஆற்றல், அணுவின் ஆற்றலுக்கும் அதிகமானது. அதனை இந்த உலகம் பின்னர் உணர்ந்து கொண்டது.

அகிம்சையோடு கூடிய சத்தியமே அதற்கு அடித்தளம். அடிகளின் அகிம்சை உணர்வு, மனிதகுலத்தோடு மட்டும் நின்று விடவில்லை. சிற்றுயிர்க்கும் உற்றதுணையாய் விரிந்து பரந்தது. ஒரு மரத்தில் சில இலைகளைப் பறிக்க நேர்ந்தாலும் அவற்றை, 'மன்னிப்பு உணர்வோடுதான் பறிக்க வேண்டும். கிளையாக கிளையாக ஒடிக்கக்கூடாது' என்பது அடிகளின் கருத்து. அகிம்சையை மிகவும் தெளிவுபட விளக்கியுள்ளார். ''நமக்குத் தீமை செய்தவரை மன்னிப்பதோடு அகிம்சையின் கடமை தீர்ந்துவிடவில்லை. அவனிடத்தில் அன்பு காட்ட வேண்டும். அப்போதுதான், அகிம்சை முழுமையைப் பெறுகிறது'' என்பது அடிகளின் வாக்கு. அவர் அகிம்சையைத் தேச பக்தியோடு இணைத்தே நோக்கினார்.

இந்திய விடுதலை முயற்சியில், அடிகள் மேற்கொண்ட அறப்போராட்டங்களின் போது, எங்கேனும் தொண்டர்களால் வன்முறை தோன்றினால், அதனைத் தமது தவறாக ஏற்றுக்

கொண்டு அப்போராட்டத்தை நிறுத்தியதோடு நில்லாமல், உண்ணாநோன்பினால், தமக்குத்தாமே தண்டனை வழங்கிக் கொள்ளவும் முற்பட்டார். அடிகள் மேற்கொண்ட உண்ணா நோன்புகள் அவர் தம் ஆன்மாவைத் தூய்மைப்படுத்தும் வகையிலும், பிறர் செய்யும் தவறுகளுக்குத் தாமே தண்டித்துக் கொள்ளும் வகையிலும் அமைந்தனவாகும். ஆனால், அந்த அரிய நோன்பு இன்றைய அரசியலில், திருவிழாக்களைப் போலன்றோ நடத்தப்படுகின்றது!

தீண்டாமை இந்து சமயத்திலுள்ள கறை என்றும், அதற்கு இந்து சமயச் சாத்திரங்களில் ஆதாரம் இல்லை என்றும், அது அகலும் வரையில் விடுதலை கிட்டாது என்றும் அடிகள் வலியுறுத்தினார். ''தீண்டாமை இந்து சமயக்கோட்பாடாயின், வேறு சமயம் புகுந்து, என் விருப்பத்தை நிறைவேற்ற முயல்வேன்'' என்றும்கூறினார்.

விடுதலைக்குப் பின்னர் உருவாகிய, இந்திய அரசியல் சட்டத்தில், 'தீண்டாமையைக் கடைப்பிடிப்பது தண்டனைக்குரிய குற்றம்' என்னும் விதி வகுக்கப்பட்டது. இந்த விதி, அடிகளின் சமுதாயப் பணிக்கு ஓர் அற்புத எடுத்துக்காட்டாகும். ஆலய நுழைவுச் சட்டமும் அடிகள் அறிவுரையின் பயனாக அமைந்ததேயாகும்.

குழந்தையர் மணத்தின் கொடுமையை உணர்ந்த காந்தி அடிகளின் எதிர்ப்பால் 'குழந்தையர் மணத் தடைச் சட்டம்' உருவாகியது. ஆடவர்களைப் போலவே மகளிரும் அனைத்து உரிமைகளையும் பெறவேண்டும் என்று அவர் வற்புறுத்தினார். இளம் விதவையர் மறுமணம் புரிந்து வாழலாம் என்பதும், அந்த மணத்திற்குச் சமுதாயம் ஒப்புதல் அளித்து மதித்திட வேண்டும் என்பதும் அடிகளின் கருத்துக்களாகும். சமயத்தின் பெயரால் மகளிர் சிலர், தேவரடியார்களாக ஆக்கப்பட்ட கொடுமையை அடிகள் எதிர்த்தார். பின்னர், சட்டத்தால், அந்தச் சமுதாயக் குறைபாடு நீக்கப்பட்டது,

ஏழைகள் மிகுந்த இந்த நாட்டில், யாவரும் வேலை இன்மையால், பட்டினி கிடத்தல் கூடாது என்று அடிகள் எண்ணினார். அதனால், இந்தியப் பொருளாதாரம், ஏழைகளின்

நலத்தில் நாட்டம் கொண்டதாக இருத்தல் வேண்டுமென்று கூறினார். செல்வர்கள், ஏழைகளின் நலம் பேணும் தருமகருத்தாக்களாக ஆகவேண்டும் என்று அறிவுறுத்தினார்.

பெரிய ஆலைகளின் பெருக்கத்தால் ஏழைகள் பாதிக்கப்படலாகாது என்பது அடிகளின் அவா. அதனால், கதர் உற்பத்தி, குடிசைத் தொழில், சுதேசிப் பொருள் உற்பத்தி போன்றவற்றைப் பொருளாதார ஆக்கப் பணிகளாக மேற்கொள்ளுமாறு வலியுறுத்தினார். அலைக் கண்ட சிலர், அடிகளை ஆலைகளின் எதிரியாக எண்ணவும் முற்பட்டனர். பெரிய ஆலைகளால் ஏழைகள், மேலும் ஏழ்மை அடையும் நிலை உண்டாகக் கூடாது என்பதே அடிகளின் கருத்து. அதனாலேயே, 'தையல் இயந்திரத்தைக் கண்டுபிடித்த அறிஞர் பெண் குலத்துக்குப் பெருந்தொண்டு புரிந்தவர்' என்று பாராட்டினார்.

தொடக்கத்தில் நாகரிக ஆடைகளில் நாட்டம் கொண்டிருந்த அடிகள், ஏழைகளின் நிலைமையினை அறிந்து தம் உடைப் பெருக்கத்தைக் குறைத்துக் கொண்டார். தமிழ்நாட்டு விவசாயிகளைப் பார்த்தபின்னர், ஒரு நான்கு முழு ஆடையையே தம் இறுதிவரை உடுத்தலானார்.

சமூக நலத்திற்காக நிதி திரட்டுவோர், தாங்கள் திரட்டும் நிதி முழுவதும் சமூக நலனுக்கே பயன்படுமாறு செய்யும் பொறுப்புடையவராக இருத்தல் வேண்டும் என்றார். அந்த நிதிகளின் கணக்கு வழக்குகளில் அடிகள் கண்டிப்பு மிக்கவராகத் திகழ்ந்தார்.

பல்வேறு சமயக்கோட்பாடுகளையும் நன்குணர்ந்த அடிகள் மக்கள் பிற சமயங்களை வெறுக்காமல், தம் சமய நெறிகளைப் பின்பற்ற வேண்டும் என்று வலியுறுத்தினார். அவருடைய வழிபாட்டுக்கூட்டங்கள், எந்த ஒரு சமயத்தையும் சாராது, அனைவரும் உவந்து ஏற்கும் பொது இயல்பு கொண்டனவாய்த் திகழ்ந்தன.

விடுதலைக்குப் பின்னர்ச், சமயவெறி கொண்ட பெரும்பான்மையோர் சிறுபான்மையோருக்குச் செய்த கொடுமைகளை எதிர்த்துத், தன்னந்தனியாக அடிகள் மேற்கொண்ட, 'நவகாளி நடைப்பயணம்' உலக வரலாற்றில் அழியாத இடம் பெற்று விளங்குகிறது. அதன் பயனாக வன்முறை மடிந்து, அன்பு மலர்ந்

து. அந்த நிகழ்ச்சி அடிகள்பால் இலங்கிய அறவுணர்வு, அருளுணர்வு, அஞ்சாமை, அகிம்சை, சத்தியவேட்கை ஆகிய பண்புகளை உலகிற்கு எடுத்துக் காட்டியது.

அடிகளுக்குப் பின்னர் மலர்ந்த, சுதந்திர இந்தியக்குடியரசில் அவர் விரும்பிய சீர்திருத்தங்கள் பல, சட்ட வடிவில் கால் கொண்டு பயன் தருவனவாக அமைந்தன.

அடிகள் அமரராகி 45 ஆண்டுகள் ஆகின்றன. அவர் பெயரால் சாலைகளும் சோலைகளும் ஊர்களும் உயர் ஆய்வுமையங்களும் அமைந்துள்ளன. அவருடைய உருவச்சிலைகளும், ஓவியங்களும் நாடெங்கும், வீடெங்கும் அழகு செய்கின்றன. அவருடைய பிறந்த நாளும் இறந்த நாளும் பெரிய அளவில் கொண்டாடப் படுகின்றன. இவை பாராட்டத்தக்கனவே.

சுதந்திர இந்தியாவில், அடிகள் காண விரும்பிய கனவுகள் பல, நனவுகளாக மாறியுள்ளன. அவர் விரும்பிய சீர்திருத்தங்கள் பல, சட்டங்களாகியுள்ளன. இவை பெருமை தரும் உண்மைகளே! ஆனால் நடைமுறையில் இன்று காணப்படுவதென்ன?

மது விலக்குச் சட்டமாயிற்று! ஆனால், வண்ண வண்ணக் குப்பிகளில் உயர்தர மது விற்கும் கடைகள் காளான்கள் போல் முளைத்துள்ளனவே!

பெண்கள் கல்வி கற்று ஆண்களோடு சரிநிகர் சமானமாய்ப் பல வகைப் பணிகளையும் புரிகின்றனர். ஆனால், அவர்கட்குச் செய்யப்படும் கொடுமைகளால், அவர்கள் தங்கள் கற்பையும் உயிரையும் இழக்கும் செய்திகளை ஏடுகள் காட்டுகின்றனவே!

தீண்டாமை சட்டத்தால் அழிக்கப்பட்டது; ஆண்டவன் திருக்கோயில்கள் அனைவர்க்கும் திறந்துவிடப்பட்டன. ஆனால், தெய்வத் திருமேனிகளே இன்று திருடப்படுகின்றனவே!

அகிம்சையே அடிகள் தாரக மந்திரமாகப் போதித்தார். ஆனால், இன்று வன்முறைகளும் குண்டு கலாச்சாரமும் தலையெடுத்துள்ளனவே!

காந்தியடிகள் மீண்டும் நம்மிடை வந்தால் எவற்றைக் காண்பார்? எவற்றை நாம் காட்டுவோம்? அடிகள் நினைவைக்

கொண்டாடும் இந்த நேரத்தில், முதியோரும், இளையோரும், இதனை எண்ணிப் பார்க்க வேண்டும்.

அடிகள் போதித்த கொள்கைகட்கும் நமக்கும் உள்ள இடைவெளியைக் குறைத்திட முயலவேண்டும். இல்லையேல் ''அடிமைச் சமுதாயமாக இருந்து விடுதலை பெற்ற நாம் சமுதாய அடிமைகளாக ஆகிவிட நேரும்''

புத்தர்வழி போற்றுவோம், ஏசுவழி நடப்போம், நபிகள் வழி நிற்போம் என்று கூறிட எண்ணற்ற இந்தியர் உள்ளனர். ஆனால், 'காந்தியடிகளின் கொள்கை வழி நடப்பவர் நாங்கள்' என்று கூற இன்று எத்தனை இந்தியர் முன்வரக் கூடும்?

காந்தியடிகள் காட்டிய வழி, சாதி சமயம் நாடு மொழி என்னும் வேறுபாடுகளைக் கடந்து மனிதகுலம் என்றும் பின்பற்றுவதற்குரிய ஒன்றாகும். அந்தப் பெருமைமிக்க நமது சொத்தினை, நாம் போற்றாது இழப்பது அறமாகுமா?

முதியவர்கள் காந்திய நெறியை நினைவிற் கொண்டு செயற்படவேண்டும். இளையவர்கள், தம் உள்ளங்களில் அவர் காட்டிய நெறியைப் பதித்துக் கொள்ள வேண்டும்.

அரசியல் விடுதலை அடைந்த பாரதம், அனைத்து வகை விடுதலைகளையும் பெற்றுப் பாரினில் ஓங்கிட, அடிகள் காட்டிய வழியே அருமருந்தாகும். அதனைப் பின்பற்றுவது நம் கடமை. வாழ்க பாரத மணித் திருநாடு.

பிற்காலச் சோழர் காலத் தமிழ் இலக்கியங்கள் காட்டும் நீர் வளம்

—பேரறிஞர் தா. ஈசுவரபிள்ளை

ஒரு நாட்டின் முன்னேற்றத்திற்கு உறுதுணையாக அமையும் அமைப்புக்களில் குறிப்பிடத்தக்கது பொருளாதாரம் ஆகும். மேலும், அது சமுதாயத்தின் பல்வேறு அமைப்புக்களின் மீது-சாதி, வகுப்பு, கல்வி, பண்பாடு போன்றவற்றின் மீது-தாக்கமும் செலுத்துகின்றது. மூலதனம், உற்பத்தி, உழைப்பு, பகிர்வு போன்றவை பொருளாதாரத்தின் அடிப்படைகளாய் அமைகின்றன. இவற்றுள் பொருள் வரும் வருவாய் பல நிலைகளில் காணப் பெறும். அவற்றுள் இயற்கை வளங்களும் பெரும் பங்காற்றுகின்றன. ஒரு நாட்டின் இயற்கை வளங்கள் அந்நாட்டின் சமுதாய, பண்பாட்டு வாழ்க்கைக்குரிய முன்தேவைகள் எனக் கருதப்படுபடுகின்றன. (A. R. Desai Rural, Sociology in Ind.a. P. 30). இவ்வகையில், பிற்காலச் சோழர் காலத்தில் காணப்பெற்ற இயற்கை வளங்களில் ஒன்றாகிய நீர்வளம் இலக்கியங்களில் சுட்டப்பெறுமாற்றைக் காண்போம்.

நீர்வளம்

இயற்கை அன்னை அளிக்கும் நீர்வளமானது ஒரு நாட்டின் குடிமக்களின் குடிநீர். வீட்டுத் தேவைகள் மட்டுமின்றி, விவசாய உற்பத்தி, தொழிற்சாலைகள், மீன்பிடித்தல் போன்ற பொருளாதாரத்தேவைகளுக்கும் பயன்படுகின்றது. மேலும், அது உணவிற்காகவும், வேறு பல தேவைகளுக்காகவும் பயன்படும் செடிகள், கொடிகள், மரங்கள் முதலியனவற்றின் வளர்ச்சிக்கும், மின் உற்பத்திக்கும், போக்குவரத்திற்கும் உதவுகின்றது. இவ்வாறு பொருளாதார வளர்ச்சிக்கும் சமுதாய முன்னேற்றத்திற்காகவும் நீர் பயன்படுவது பற்றியே வள்ளுவர் நாட்டுக்குரிய உறுப்புகளைக் கூறுமிடத்து,

''இருபுனலும் வாய்ந்த மலையும் வரு புனலும்
வல்லரணும் நாட்டிற் குறுப்பு'' (377)

என்கிறார். இக்குறட்பாவுக்கு உரையெழுதும் பரிமேலழகர் 'வருபுனல்'' என்பதற்கு, 'மலையினின்று வரும் நீர்! '..........

ஈண்டு புனல் என்றது. துரவு, கேணிகளும் ஏரிகளும் ஆறுகளு மாகிய ஆதாரங்களை......'' என நீர்வளம் வரும் வாயில்களைச் சுட்டுகின்றார். பிற்காலச் சோழர் காலத்தில் இத்தகைய நீர் வளம் மேம்பட்டுக் காணப்பட்டது என்பதை இலக்கியக் குறிப்புக் களால் அறியமுடிகின்றது. சோழநாடு நீர்வளம் மிக்கது என்பதைச் சுட்டும் வகையில் அது நீர் நாடு என்றே பல இடங்களில் குறிப்பிடப்படுகின்றது. (பெரிய இயற்பகை - 1:2, ஏயர்கோன் 1:1, திருஞான. 628). பெரியபுராணம் சோழநாட்டைப் புனல்நாடு, காவிரி நாடு என்றும் சுட்டுகின்றது. ஊர்வருணனைகளிலும் சேக்கிழார் பெருமான் நீர் வளத்தைக் குறிப்பிடுகின்றார். சான்றாக, அழகிய நீர்வளமுடைய சீகாழி (திருஞான. 230:4), மணமுடைய புனித நீர்வளம் பொருந்திய குளிர்ந்த சீகாழிப்பதி (திருஞான. 494:2), குளிர்ந்த பூக்களால் சோழநாடு சோறு டைத்து என்ற பெருமைக்கு நிலைக்களனாக அமையும் காவிரி யாறு, சீரில் நீடிய செம்பியர் பொன்னி (அமர்நீதி. 1:1), புனல் வருகின்ற காவிரி (அரிவாட்டாயர் 1;1), மிகுந்த நீர் பாய்ந்து கடலையும் தூயதாகச் செய்யும் காவிரி (இயற்பகை.1). நேர் கிளைகளாகக் கால்கள் பிரிந்து செல்லும் காவிரி (இயற்பகை 1). பொன்பரப்பி மணிவரன்றிப் புனல் பரக்கும் காவேரி (கழற்று றிவார் 130:1), வாய்ந்த நீர்வளத்தால் ஓங்கிய மண்ணிய பொன்னி (குங்கிலியர். 1:1) எந்நாளும் பொய்யா தளிக்கும் பூந்தன் பொன்னி (சண்டேசுவரர். 1:1), கடைசியர் தங்கண் காட்டும் காவேரி (சிறுத்தொண்டர். 1:3), மலர் மணிகளைக் கொண்டு வழியில் இரு கரைகளிலும் பொன் பரப்பிச் செல்லும் காவிரி (தடுத்தாட். 116:1–2), வளம் செய்கின்ற காவிரி திருஞான 2), பெருக்கினால் இரைச்சல் செய்து அலைகள் பொருந்தும் காவிரி (திருஞான. 101:1) வருபுனலுடைய காவிரி (திருஞான. 285:4), பருவம் தளர்தலில்லாத காவிரி (திருஞான. 308:1), அலைகளுடைய பெரிய நீர் பெருக்காகிய காவிரி (திருஞான. 436:1), மணமுடைய நல்ல நீர் பொருந்திய காவிரி (திருஞான. 459:1-2), பொங்கும் நீர் பெருக்குடைய காவிரி (திருஞான.894:1) விரிந்த பெரும் சோலைகள் பக்கங்களில் பரந்து நிகழும்படி நீர் பரவியோடும் காவிரி (திருஞான 930 1–2), நீர் இடையறாது பொருந்திய காவிரி (திருஞான 190;1), சேல்மீன்கள் பொலிவு பெற்ற நீர்வளமுடைய சீகாழி, (திருஞான. 521:3), மலர்களை வாரி வழங்கும் புனல்வளமுடைய புகலூர் (திருநாவுக். 233:2),

பெருகும் நீர்வளமுடைய திருப்பேணுப் பெருந்துறை (திருஞான. 549:1), குளிர்ந்தநீருடைய திருமறைக்காடு (திருஞான. 751:1) விரிபுனலால் சூழப்பட்ட திருவிரட்டானம் (திருநாவுக் 14) என வரும் பெரியபுராணக் குறிப்புகளைக் காட்டலாம். இனி நீர் வளம் தரும் வாயில்களைக் காண்போம்.

ஆறுகள்

இயற்கையின் கொடையாகிய மழையாலும், மலை ஊற்றுக் களாலும் கிடைக்கும் நீர்வளத்தைச் சுமந்துகொண்டு, ஏனைய இடங்களுக்குப் பகிர்ந்து அளிக்கும் பெரும் பணியை ஆறுகள் மேற்கொள்கின்றன. நம் நாடு பல்வேறு நிலவியல் தன்மைகளை யும். கால நிலைகளையும் கொண்டது. எனவே மழைப்பொழிவு எல்லா இடங்களிலும் ஒன்று போல் அமைதல் இல்லை. எனவே, விவசாயத் தொழிலுக்குத் தேவையான நீர் ஆறுகள், குளங்கள், ஏரிகள், கால்வாய்கள் மூலம் எல்லா இடங்களுக்கும் பகிர்ந்து கொள்ளப்படுகின்றன. இவற்றுள் பல்வேறு இடங்களுக்கு நீரைக் கொண்டு செல்லும் இணைப்புப் பணியை மேற்கொள்கின்றன.

ஒலியுடன் நிறைத்த குளிர்ந்த நீர் செல்லும் யாறு (சிந்தா மணி, நாமகள் 94:4), குளிர்ந்த நீரையுடைய குளங்களைச் சூழக்கொண்டயாறு (சிந்தாமணி, விமலை 46:3) என ஆறுகளின் நீர்வளப் பொலிவு சிந்தாமணியில் சுட்டப் பெறுகிறது. உலாவு கின்ற நீர்ச் செழிப்புடைய காவிரி (திருநாவுக்.213:3) நீர் நிறைந்த காவிரி (திருநாவுக். 301), வாய்ந்த வளம் தரும் காவிரி (திருநா வுக். 392:2), மேதினிக்கு வளம் தரும் காவிரி (திருமூல நாயனார். 8:3-4) பிழையாத்தெய்வப் பொன்னி (மங்கையர்க்கரசி. 3:1), அலை விசும் புனல் நிறைந்த காவிரி (கலிங், பரணி41:1), வண்டல்பெய் பொன்னி (கலிங். பரணி. 148:1), சோழ நாட்டு மக்கள் நல்வாழ்வு வாழக்கருதி நீர்ச் சுழி நிறையும் காவிரி (இ,சோ. உலா 168:170), வானவரும் அஞ்சும்படி கரையைப் பொருது மேல்வரும் காவிரி (இ. சோ. உ.240-241), பொய்யாத காவிரி (வி. சோ. உ. 80-81). வற்றாத காவிரி (வி.சோ.உ. 80-81), எனக் காவிரியாற்றின் நீர்வளப் பெருக்கு, நீரின் தன்மை. பொய்யாதளிக்கும் மாண்பு, விலை மதிப்பற்ற பொருள்களை வழங்கும் சிறப்பு, வளம் பெருகச் செய்யும் பெருமை, ஒளி, தளராத தன்மை, மணம், மக்கள் நல்வாழ்வுத் துணைநிற்கும் மாண்பு. அகன்ற, பெரிய கரைகள், பரப்பு, நீரின் வேகம் முதலியன சுட்டப்பெறுகின்றன.

காவிரியாறு மட்டுமின்றி அம்பிகாபதி (ஏறிபத்தர் 12:1), கொள்ளிடம் (திருநாளைப்.1). கோதாவரி (இ.சோ.உலா.462-3), தாமிரவருணி (இ.சோ.உலா. 463-64), பாலியாறு (திருக்குறிப்பு 23, திருஞான 1004, 1014) பெண்ணெய் (திருநாவுக் 3:3-4) போன்ற ஆறுகள் பற்றியும், மழைக் காலத்தில் பெருகியும், ஏனைக் காலத்தில் சுருங்கியும், வேனிற் காலத்தில் வறண்டும் காணப்படும் கானியாறுகள் பற்றியும் (திருஞான 386:1) அறிய முடிகின்றது ஆறுகளின் வளம் கொழிக்கும் வன்மையைக் கண்ணுற்ற கம்பர் சரயு நதியை ''உயிர்கெல்லாம் தாய்முலை அன்னது'' (கம்ப.பால. 121:3-4) எனப் பால்நினைந்தூட்டும் தாயுடன் ஒப்பிட்டுக் கூறுகின்றார்.

ஏரிகள்

ஆறுகளைப் போல ஏரிகளும் நீர்வளம் காத்துக் பொருளாதார வளர்ச்சிக்குப் பெரும்பங்காற்றுகின்றன. ஆறுகள் கொண்டு வரும் நீரைப் பெற்று ஏரிகள் அதைச் சேமித்து வைக்கின்றன. பெருவெள்ளம் வருவதைக் கண்டு வாய்க்கால்களின் இடந்தொறும் இடந்தொறும் படல்களை இட்டு நாட்டிலுள்ளார் நீரின் விரைவை அடக்க, நீரின் வேகம் தணிதலால் பயிருடைய நீர் நிலையும், ஏரியும் நிலைகொள்ளாமல் நிறைந்தமையைச் சிந்தாமணி காட்டு கின்றது. (நாமகள் 12). செப்பேடுகளிலும் ஏரிகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. திரிபுவனமாதேவிச் சதுர்வேதிமங்கலம் தானமாக வழங்கப்பெற்றபோது வரியிலியாக அறிவிக்கப் பெற்றனவற்றுள் திரிபுவனப்பேரேரியும் அடங்கும் (க.செ. தொகுதி. 2, 4. 34).

வாவிகள்-குளங்கள்

இலக்கியங்களில் நீர்வளம் காக்கும் குளங்கள் பற்றிய குறிப்புகளும் உள்ளன. (கழற்றறிவார் 62:1, தடுத்தாட் 185:1, திருநாட்டு 4:3, திருநாவுக் 4:3, 501, சிந்தாமணி காந்த 253:4, குணமாலை 4:1, 22:4. பதுமை 37:3. 38:1, கேமசரி 29:1). இக்குளங்களில் கயல் மீன்கள் நிரம்பக் காணப் பெறுகின்றன (திருஞான 418:5). இக்குளங்கள் மணலை அழகுறு கன்னிப் பெண்களைப் போல் பிறரால் காணமுடியாத அளவுக்கு நீர் நிறைந்து காணப்பெற்றன. திருநாட்டு (17:3) கடல் போன்று பரந்து காட்சியளித்தன. (மான்கஞ்சாறனார் 3:4), போகும் வழி

ஏதுமின்றிக் காணப்பட்டன. (திருநாட்டு 17:3), இக் குளங்களி லிருந்து விளை நிலங்களுக்கு நீர் செல்ல மடைகள் காணப் பெற்றன. (சிந்தாமணி பதுமை 37, கலிங் பரணி 503), இச் குளங்களின் பக்கங்களில் சோலைகள் சூழ்ந்துள்ளன (சிந்தாமணி 68). மழைக்கால நீரைத் தம்மகத்தே கொண்ட குளங்கள் விவசாயத் திற்கு மட்டுமின்றி நீராடவும் பயன்பட்டன. (திருஞான 101:2). சமண்பாக்கம் சாசனம் அளவில் சிறிய குளங்களைக் குட்டங்கள் எனக் குறிப்பிடுகின்றது. (வரி.17) இவ்வாறு குளங்களின் நீர்ப் பரப்பு, வளம், பயன்கள், அமைவிடம் முதலான செய்திகள் தெரிய வருகின்றன.

சுனைகள், கால்வாய்கள், ஓடைகள், கிணறுகள்

நாட்டின் நீர்வளத்தைக் காப்பனவாகச் சுனைகள், கால் வாய்கள், ஓடைகள், கிணறுகள் ஆகியனவும் அமைகின்றன. சிந்தாமணியில் சுனைகள் பற்றிய குறிப்புக்கள் உள்ளன. (சிந்தா மணி. கேமசரி. 84:2, நாமகள் 46:1, பதுமை 43:1,250:3), நீர்ப்பிடிப்புக்களில் தேங்கி நிற்கும் நீரை வயல்களுக்கும் பிற இடங்களுக்கும் கொண்டு செல்லும் பணியைக் கால்வாய்கள் செய்கின்றன. (திருக்குறிப்பு. 8:3, திருநாட்டு 9:4), கம்பர் குலம் பிரிதலை மழைநீர் ஒரு கால்வாயிலிருந்து மற்றொரு கால்வாயாகப் பிரிந்து செல்வதுடன் ஒப்புமைப்படுத்திக் காட்டுகின்றார். (கம்ப. பால.1:18:4), காவிரியாறு கால்வாய்களின் வழியாகச் சோலை களைக் கடந்து செல்லும் காட்சி காட்டப்பெறுகின்றது (கலிங். பரணி. 278:1). ஓடைகள்பற்றிய குறிப்புகளும் உள்ளன (திருக் குறிப்பு 31:2, சிந்தாமணி. நாமகள்.37:1), இவை, புனல்குட்டம் எனச் சுட்டப்படுகின்றன (சிந்தாமணி. குணமாலை 18), சமுதா யத்திற்கு நீர்வளம் அளிப்பனவாகக் கிணறுகளும் திகழ்கின்றன (திருநாவுக். 201, சிந்தாமணி முத்தி.400:1).

இவ்வாறு பிற்காலச் சோழர்கால இலக்கியங்கள் மூலம், இயற்கை வளங்களுள் ஒன்றாகிய நீர் வளம் பற்றி அறிய முடி கின்றது. இந்நீர் வளங்களைப் பேணிப் பாதுகாக்கப் பிற்காலச் சோழ மன்னர்கள் மேற்கொண்ட முயற்சிகளைக் கல்வெட்டுக்கள் மூலமும் இலக்கியங்கள் மூலமும் அறியமுடிகின்றது என்பது இவண் சுட்டத்தக்கது ஆகும்.

இணைப்புமலர்களில் வாசகர் கடிதங்கள்

ஆ. நாகராசன்

முன்னுரை

தமிழ் நாளிதழ்கள் வழங்கும் இணைப்புமலர்களில் கடிதங்களும் ஒரு பகுதியாக வருகின்றன. இவை இதழ்களின் தரத்தை நிருணயிப்பதில் முக்கிய பங்கு வகிக்கின்றன. எனவே, இவற்றை ஆராயும் பொருட்டு, 1993 சூலை மாதம் வெளிவந்த அனைத்து இணைப்புமலர்களும் (40) எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளன.

வாசகர் கடிதங்கள்

இதழ் ஆசிரியருக்கு அந்த இதழ்களைப் படிக்கும் வாசகர்கள் அதைப் பற்றித் தங்களின் கருத்துக்களைத் தெரிவிக்கும் பொருட்டு, எழுதப்படும் கடிதங்களே வாசகர் கடிதங்கள் எனப் படுகின்றன. ''வாசகர் கடிதம் என்பது வாசகர்களால் இதழ் ஆசிரியருக்கு எழுதப்படும் கடிதம் ஆகும். இது வாசகர்களின் ஆர்வத்தினால் எழுதப்படுகிறது. இப்பகுதியினை இதழ்களின் மதிப்பீட்டுப் பகுதி எனலாம்'' என்பர்[1]. இதிலிருந்து இதழ்களைப் பற்றி கருத்துக்களைத் தெரிவிக்கும் பொருட்டோ ஏதாவது ஒரு படைப்பு எவ்வாறு இடம்பெற்றுள்ளது என்பதைப் பற்றிய தன் கருத்தை வெளியிடும் முகமாகவோ வாசகரால் எழுதப்படும் கடிதமே வாசகர் கடிதம் எனலாம்.

வாசகர் கடிதங்களின் முக்கியத்துவம்

வாசகர் கடிதங்கள் ஓர் இதழின் நாடித்துடிப்பு போன்றவை. இந்தக் கடிதங்களின் மூலம்தான் இதழ்களின் நிறைகுறைகளை இதழாசிரியர் அறிந்து கொள்கிறார். இதை வைத்து தனது இதழின் போக்கைச் சரியான முறையில் அவரால் கொண்டு செல்ல இயலும். வாசகர் கடிதப்பகுதி ஆசிரியருக்கும் வாசகர்களுக்கும் இடையே இணைப்புப் பாலமாகச் செயல்படுகிறது. எனவே, எல்லா இதழ்களுமே வாசகர் கடிதங்களை வெளியிடுவதில் தனிக்கவனம் செலுத்துகின்றன.

ஓர் இதழைத் தொடர்ந்து படித்துவரும் வாசகர் அந்த இதழோடு ஏதாவது ஒரு வகையில் தொடர்பு வைத்துக் கொள்ள முயல்கிறார். ஒரு சில வாசகர்கள் தங்கள் பெயர் எல்லா பத்திரிகை

களிலும் வரவேண்டும் என்ற பேராசையால் இதழ்களுக்கு ஏற்பத் தனது கருத்துக்களை மாற்றி எழுதவும் செய்கின்றனர். எடுத்துக்காட்டாக, ஒரு வாசகர் 'துக்ளக்' ஆசிரியர் சோவைப் பற்றி 'இதயம் பேசுகிறது' என்னும் இதழில் கேவலமாகவும், 'துக்ளக்' இதழில் பாராட்டியும் ஒரே தேதியில் கடிதம் எழுதியுள்ளார். இதை ஒரு வாசகர் அறிந்து துக்ளக்கிற்குத் தெரியப்படுத்தியுள்ளார். உடனே அடுத்த இதழில் (துக்ளக்கில்) கீழ்க்கண்டவாறு கடிதம் ஒன்று வெளியிடப்பட்டது.

''இரண்டு பத்திரிகைகளுக்கு ஒரே விஷயத்தைப் பற்றி முற்றிலும் மாறுபட்ட நிலையில் நின்று ஒருவர் கடிதம் எழுதியிருப்பது மிகவும் கேவலமான செயல். அச்சில் தன் பெயரைப் பார்க்கும் ஆவலில் இவ்வளவு கீழ்த்தரமாக அந்த மனிதர் செயல்பட்டிருக்க வேண்டாம். இப்படிப்பட்ட வாசகர்கள் துக்ளக்கிற்குத் தேவையில்லை. எங்களைப் பொறுத்தவரை இனி இந்த வாசகர் எழுதும் எந்த விஷயமும் துக்ளக்கில் இடம் பெறாது,''[2] (1.7.83, ப.11) இவ்வாறு ஒரு சிலர் முறை தவறி நடந்தாலும் பல வாசகர்கள் தங்களின் கருத்தை மட்டும் வெளியிட்டுள்ளனர், இதன் மூலம் வாசகர் கடிதத்தின் முக்கியத்துவத்தை நாம் அறிந்து கொள்ளலாம்.

இணைப்புமலர்களும் வாசகர் கடிதங்களும் :

தமிழ் நாளிதழ்களான தினமலர், தினமணி, தினகரன், தினத்தந்தி ஆகியவை பல்வேறு பெயர்களில் இணைப்புமலர்களை வெளியிட்டு வருகின்றன. அவற்றையும், ஆய்வுக்கு உட்பட்ட மாதத்தில் அவை வெளியிட்ட இணைப்பு-மலர்களின் எண்ணிக்கையையும் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

அட்டவணை—1

நாளிதழ்	இணைப்புமலர்கள்	எண்ணிக்கை *
தினமலர்	சிறுவர் மலர்	5
	கதை மலர்	5
	வார மலர்	4
தினமணி	தினமணிச்சுடர்	5
	தினமணிக்கதிர்	4
	வணிகமணி	4

தினகரன்	வசந்தம்	4
தினத்தந்தி	குடும்பலர்	4
	தங்கமலர்	4

(*இந்த எண்ணிக்கை ஒவ்வொரு மாத்திலும் இணைப்புமலர்கள் வெளிவரும் நாட்களைப் பொறுத்து மாறுவதுண்டு)

மேற்கண்டவற்றில் தினத்தந்தி வழங்கும் தங்கமலர் தவிர மற்ற எல்லா இணைப்புமலர்களும் வாசகர் கடிதங்களை வெளியிட்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் வெவ்வேறு எண்ணிக்கையில் கடிதத்தை வெளியிட்டுள்ளன. 1993 சூலை மாதத்தில் மட்டும் இவை 312 வாசகர் கடிதங்களை வெளியிட்டுள்ளன. இவற்றில் அதிகபட்சமாக தினத்தந்தி வழங்கும் குடும்பமலர் 52 கடிதங்களையும், குறைந்த அளவாக தினமணி வழங்கும் தினமணிக்கதிர் 23 கடிதங்களையும் வெளியிட்டுள்னன. (அட்டவணை:2)

அட்டவணை–2

இணைப்புமலர்கள்	வாசகர்கடிதங்கள்
சிறுவர்மலர்	36
கதைமலர்	42
வாரமலர்	39
தினமணிச்சுடர்	27
தினமணிக்கதிர்	23
வணிகமணி	42
வசந்தம்	51
குடும்பமலர்	52
மொத்தம்	312

இவ்வட்டவணையின் வாயிலாக இணைப்பு மலர்களில் வாசகர் கடிதத்திற்குள்ள முக்கியத்துவம் புலனாகிறது.

வாசகர் கடிதங்களை வெளியிடும் முறை :

பெரும்பாலும் எல்லா இணைப்பு மலர்களுமே வாசகர் கடிதங்களுக்குக் கால் பக்கம் முதல் அரைப்பக்கம் வரை இடம்

ஒதுக்குகின்றன. இக் கடிதங்கள் பல்வேறு பெயர்களில் வெளி வருகின்றன. (அட்டவணை:3)

அட்டவணை—3

இணைப்புமலர்கள்	பெயர்
சிறுவர் மலர்	வாசகர்பகுதி
கதைமலர்	அலோ பொறுப்பு ஆசிரியர்
வாரமலர்	அர்ச்சனை
தினமணிச்சுடர்	கடிதங்கள்
தினமணிக்கதிர்	கடிதங்கள்
வணிகமணி	வாசகர்
வசந்தம்	தட்டிக் கொடுங்கள் / கேளுங்கள்
குடும்பமலர்	வாசகர் கடிதம்

வாசகர் கடிதங்கள் பெரும்பாலும் கட்டுரை, துணுக்கு, சிறுகதை, தொடர்கதை, கேள்வி-பதில், கவிதை. படக்கதை, அட்டைப்படம், புதிர், ஓவியம், மலர் பற்றிய பாராட்டு ஆகிய வற்றைப் பற்றியே வந்துள்ளன.

''எங்கள் ஞாயிறு மலராகிய வசந்தம் இதழுக்கு அனைத்துப் பகுதிகளையும் பாராட்டி வாசகர்கள் கடிதம் எழுதி வருகிறார்கள். முதற்பக்கக் கட்டுரை சமத்கார புலவர், அஞ்சறைப் பெட்டி, மருத்துவ கேள்வி-பதில், கேளுங்கள் தரப்படும். காமிரா ஆங்கிள், சின்ன சின்ன யோசனைகள், கவிதை நடைக்கவிதை, விந்தை உலகம், அறிவியல் அதிசயம் போன்றவை வாசகர்கள் அபிமானம் பெற்ற பகுதியாகும். தவிர தலைவர்கள், மாமனிதர்களைப் பற்றிய துணுக்குச் செய்திகள் வாசகர்களை மிகவும் கவர்ந்துள்ளன. இதே போல் சிறுகதைகள், தொடர்கதை, சிறுவர்கதை பகுதியும் வாசகர்கள் வரவேற்பைப் பெற்றவையே.

பொதுவாக வாரந்தோறும் வாசகர்களிடமிருந்து சுமார் ஐந்நூறு கடிதங்கள் வரும். இவை மேலே கண்ட பகுதிகளுக்குப் பகிர்ந்து வரக்கூடியவை.

தவிர, இந்த வாரக்கேள்வி, புதிர்ப் போட்டி, வண்ணப் போட்டி பகுதியிலும் வாசகர்கள் ஆர்வம் காட்டி கலந்து கொள் ளும் கடிதங்களும் தனியாக நிறைய சேரும்.

''பகுதிகள் பற்றி வாசகர்களின் விமர்சனக் கடிதங்களைப் பார்வையிட்டு அதிலிருந்து தேர்வு செய்து பிரசுரிக்கப்படுகின்றன''3 என்று இணைப்புமலர் ஆசிரியர் கூறுவதன் மூலம் வாசகர் கடிதங்களைத் தேர்வு செய்து வெளியிடுகிறார்கள் என்பதை அறியகிறது.

1993சூலையில் கட்டுரைகளைப் பற்றிய கடிதங்களே அதிகமாக வெளிவந்துள்ளன. அதற்கு அடுத்தாற்போல் துணுக்கு சிறுகதை, தொடர் கதை, படக்கதை என்ற அளவில் இடம்பெற்றுள்ளன. இவற்றைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம். (அட்டவணை:4) (அட்டவணை-பக்கம் 37ல் பார்க்க)

வாசகர் கடிதத்தில் மூன்று வகை :

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இணைப்பு மலர்களில் வெளிவந்துள்ள கடிதங்களை நோக்குமிடத்து அவை மூன்றுவகைகளில் வெளிவருவதைப் பற்றி அறிய முடிகிறது :

1. பாராட்டி எழுதுதல்
2. கருத்துக்களைக் கூறுதல்
3. தவற்றைச் சுட்டிக்காட்டுதல்.

இவற்றில் பெரும்பாலான கடிதங்கள் பாராட்டி எழுதப்பட்டவையே ஆகும். ஒரு சில கடிதங்கள் தாம் கருத்துக்களைக் கூறுவதாகவும், தவறுகளைச் சுட்டிக் காட்டுவதாகவும் வெளிவந்துள்ளன.

எடுத்துக்காட்டாக, பாராட்டி எழுதும் கடிதமாக 4.7.93 அன்று வெளிவந்த குடும்ப மலரில் ''குழந்தைகளை மட்டுமல்லாது அனைத்துத் தரப்பினரையும் குதூகலிக்கச் செய்த கார்டூனின் தந்தை வால்ட் டிஸ்னி-யின் வாழ்க்கைக் குறிப்புக்கள் அருமை. அவரைப் பற்றிய விரிவான செய்தி அசத்தல்''4 என்பதை அ. மணிமாறன் என்பவர் அரியமங்கலத்தில் இருந்து எழுதியுள்ளார். இதனைப்பாராட்டுக் கடிதமாகக் கருதலாம்.

கருத்துக் கூறும் கடிதத்திற்கு எடுத்துக்காட்டாக 17.7.93 அன்று வெளிவந்த தினமணிச்சுடரில் டாக்டர் செல்வி. கணேசன் என்பவர் எழுதிய பின்வரும் கடிதத்தைக் குறிப்பிடலாம், ''3.7.93 சுடரில் தொழிலாளர்களைத் தாக்கும் நோய்களில், தோல்பதனிடுவோரின் வியாதிகள், இரைச்சல் மிக்க ஆலைகளில் பணிபுரி

அட்டவணை-4

எண்	இணைப்பு மலர்	கட்டுரை	துணுக்கு	சிறுகதை	தொடர் கதை	கேள்வி பதில்	கவிதை	படக் கதை	அட்டைப் படம்	புதிர்	ஓவியம்	இணைப்பு மலர்	மொத்தம்
1.	சிறுவர் மலர்	1	7	8	5	—	—	9	7	—	1	1	36
2.	கதை மலர்	4	6	8	1	3	—	—	—	—	—	—	42
3.	வார மலர்	14	14	9	—	—	2	—	—	—	—	—	39
4.	தினமணிச்சுடர்	21	2	1	—	3	—	—	—	—	—	—	27
5.	தினமணிக்கதிர்	9	2	4	5	3	—	—	—	1	—	—	23
6.	வணிகமணி	38	—	—	—	—	—	—	—	—	—	4	42
7.	வசந்தம்	12	18	7	4	3	5	1	1	—	—	—	51
8.	குடும்பமலர்	24	20	5	2	1	—	—	—	—	—	—	52
	மொத்தம்	123	69	62	17	13	7	10	8	1	1	5	312

வோரின் செவிட்டுத் தன்மை, குரல் ஒலி குன்றுதல், ஒளிமிக்க பற்றவைப்பு வேலைகளில் ஈடுபடுவோருக்கு உண்டாகும் பார்வைக் கோளாறுகள், பெட்ரோல் பங்குகளில் வேலை செய்யும் சிறுவர்கள் சிறுகச் சிறுக பெட்ரோலில் கலந்து வரும் நச்சுப் பொருளைச் சுவாசித்து பின் அடிமையாகிவிடும் குலு ஸ்னிஃப்பிங் (Glue Sniffing) ஆகியவை பற்றியும் சேர்த்திருக்கலாம்''[5].

தவற்றைச் சுட்டிக்காட்டும் கடிதங்களுக்கு எடுத்துக்காட்டாக 2-7-93 நாளிட்ட சிறுவர் மலரில் வெளியான பின்வரும் கடிதத்தைக் குறிப்பிடலாம். 'ஜூன் 4 சிறுவர் மலர் இதழில் வெளியான அறிவுக்கு ஐந்து பகுதியில் துரு பற்றி வந்துள்ளது. அதில் 'துரு' வின் விஞ்ஞானக் குறியீடு Fc_2, O_3, HO_2- என வந்துள்ளது. இது தவறு. FcC_2 O_3 H_2O- என வந்திருக்க வேண்டும்'[6] என்று விஜயா என்பவர் திருப்பத்தூரில் இருந்து எழுதியுள்ளார். அதே போன்று, 30-7-93 நாளிட்ட சிறுவர் மலரில் 'ஜூலை 2, 93 சிறுவர் மலர் இதழில் வெளியான 'புத்திசாலிப் பெண்' படக் கதையில் மூலதேவனின் நண்பர் சசிக்கு மீசை இல்லை. கடைசி ஒரு படத்தில் மட்டும் மீசை உள்ளது. தவறு ஏனோ?'[7] என்று வெங்கடேஷ்பிரபு மதுரையில் இருந்து எழுதியுள்ளார்.

இவ்வாறு வாசகர்கள் இதழ்களைப் பாராட்டியும், தங்களுடைய கருத்துக்களைக் கூறியும், தவறுகளைச் சுட்டிக்காட்டியும் எழுதுவதன் மூலம் இதழ் ஆசிரியர்கள் வாசகரின் மனநிலைக்கு ஏற்ப இதழை வழிநடத்த உறுதுணையாக அமைகிறது.

வாசகர் பற்றிய மதிப்பீடு

தமிழில் வெளிவரும் நாளிதழ்களான தினமலர், தினமணி, தினந்தந்தி, தினகரன் ஆகிய நான்கிற்கும் தனிப்பட்ட வாசகர்கள் இருக்கிறார்கள். மேலும், அவை வெளியிடும் இணைப்புமலர்களுக்கும் தனிப்பட்ட வாசகர்கள் இருக்கிறார்கள் என்பதை வாசகர் கடிதங்களின் முகவரிகளைக் கொண்டு அறியமுடிகிறது. மேலும் வாசகர்களை அடிப்படையாகக் கொண்டு இணைப்பு மலர்களைக் கீழ்கண்டவாறு வகைப்படுத்த இயலும் என்பதையும் கண்டறிய முடிந்தது.

வாரமலர் குடும்பமலர் தினமணிகதிர்	பொதுவான வாசகர்களுக்கு

சிறுவர்மலர் / தங்க மலர்	சிறுவர்களுக்கு
வசந்தம்	பொதுவான வாசகர் + சிறுவர்களுக்கு
கதைமலர்	இலக்கிய வாசகர்சளுக்கு
தினமணிச்சுடர்	அறிவியல் வாசகர்களுக்கு
வணிகமணி	பங்கு முதலீடு, வணிகம் தொடர்பான தொழிலில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு

பல தரப்பட்ட வாசகர்களையும் தன்வசப்படுத்த ஒரே நாளிதழ் மூன்று இணைப்புமலர்களையும். மேலும் பல இணைப்பு இதழ்களையும் வெளியிடுகின்றன. இவற்றைப் படிக்கும் வாசகர் களில் தமது கருத்துக்களையும், மலரின் நிறைகுறைகளையும் ஆசிரியருக்கு எழுதுபவர் சிலரே. அவற்றில் ஆசிரியர் பிரசுரிக்கும் கடிதங்கள் மிகச் சிலவே. இக்கருத்து ஆய்வாளருக்கு 'வசந்தம்' இணைப்புமலர் ஆசிரியர் எழுதிய கடிதத்தின் மூலம் உறுதி செய் யப்படுகிறது.

வாசகரும் ஊரும் :

சூலை 1993-இல் வெளிவந்த கடிதங்களைக் கொண்டு பார்க்கும் போது, கிராமங்களைவிட நகரங்களிலேயே அதிக வாச கர்கள் இருப்பது தெரிய வருகிறது. இக்காலப் பகுதியில் வெளி வந்த மொத்தக் கடிதங்கள் 312 ஆகும். இவற்றை 1'3 ஊர்களில் இருந்து எழுதியுள்ளனர். இதில் 11 நகரங்களில் இருந்து மட்டும் 11 கடிதங்கள் வந்துள்ளன. இதை கிராமங்களுடன் ஒப்பிடும் பொழுது, நகரங்களில் இருந்து சராசரி 7 கடிதங்களும், கிராமங்களில் இருந்து சராசரி 2 கடிதங்களும் வந்துள்ளமை தெரிய வருகிறது. இவற்றைக் கொண்டு பார்க்கும்பொழுது, வாசகர் வட்டம், விற் பனைப் பரப்பு, மற்றும் மக்கள் தொகைப் பெருக்கம் ஆகியவை நிறைந்த நகரங்களிலிருந்தே வாசகர் கடிதங்கள் அதிகமாக வரு கின்றன. மேலும், கிராம மக்களுக்த இன்னும் தனது கருத்துக் களைப் பிறரிடம் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்ற ஆவல் அதிக மாக வரவில்லை என்றும் கருதத் தோன்றுகிறது. இதற்குக் கல்வி யறிவுக் குறைபாடும் ஒரு காரணமாக இருக்கிறது எனலாம்.

வாசகரும் எழுதிய கடிதமும் :

ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட இணைப்புமலர்களில் வெளிவந்த மொத்த கடிதங்கள் 312. இவற்றில் ஒன்றுக்கு மேல் கடிதம் எழுதியவர்கள் 39 பேர். பெரும்பாலானோர் ஒரு கடிதத்தையே எழுதியுள்ளனர். ஒரு சிலர் இரண்டு, மூன்று, நான்கு, ஐந்து என கடிதங்களை எழுதியுள்ளனர். அவற்றைக் கீழ்க்கண்ட அட்டவணை மூலம் அறியலாம்.

அட்டவணை—5

கடிதத்தின் எண்ணிக்கை		எழுதியவர்களின் எண்ணிக்கை
1		273
2		28
3		6
4		3
5		2
	மொத்தம்	213

ஒரே வாசகர் ஒன்றுக்கு மேல் கடிதம் எழுதியிருந்தாலும் ஒரு சிலர் ஒரே இணைப்பு மலருக்கும், ஒரு சிலர் ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்புமலர்களுக்கும் கடிதம் எழுதியுள்ளனர். இவ்வாறு ஒன்றுக்கு மேற்பட்ட இணைப்பு மலர்களுக்கு கடிதம் எழுதியவர்கள் 19 பேர்.

முடிவுரை :

எந்த ஒரு தகவல் தொடர்பு சாதனத்திற்கும் எதிருட்டு (Feed-back) என்பது இன்றியமையாத ஒன்று. இன்றியமையாத ஒன்று. இந்த வகையில் இணைப்புமலர்களுக்கு எதிருட்டாக அமைவது வாசகர் கடிதங்களே. இது இதழ்களின் போக்கை நிர்ணயிக்க பெரிதும் உதவுகிறது. இணைப்புமலர்களில் தினத்தந்தி வழங்கும் தங்கமலர் தவிர மற்ற எல்லாம் வாசகர் கடிதங்களை

வெளியிடுகின்றன, ஆய்வுக்குரிய ஒரு மாத காலத்தில் 173 ஊர்களில் இருந்து 312 கடிதங்கள் பிரசுரம் ஆகியுள்ளன. இதில் ஒரு கடிதத்தை மட்டும் எழுதியவர்கள் 273 பேர். அதிகபட்சமாக ஐந்து கடிதங்களை எழுதியவர்கள் 2 பேர். ஒரே வாசகர் ஒன்றுக்கு மேல் கடிதங்களை எழுதினாலும், வெவ்வேறு மலர்களுக்கு கடிதம் எழுதியவர்கள் 19 பேர். பெரும்பாலும் நகரங்களில் இருப்பவர்களே அதிக கடிதம் எழுதுகிறார்கள். இதற்கு கல்வி அறிவு, விற்பனைப் பரப்பு மற்றும் ஆர்வச் செயல்பாடு ஆகியவையே காரணம் எனலாம். துணுக்குகள் எழுதுவதைப் பொழுது போக்காக சிலர் கொண்டிருப்பதைப் போன்று, வாசகர் கடிதங்களை எழுதுவதையும் சிலர் பொழுது போக்காகக் கொண்டுள்ளனர் என்பதை அறிய முடிகிறது. இவர்கள் எழுதிய எல்லாக் கடிதங்களும் கருத்துக் கூறுதல், பாராட்டுதல், தவறுகளைச் சுட்டுதல் என்ற மூன்று நிலைகளில் அமைந்துள்ளன. இவற்றில் பாராட்டும் முறையில் அமைந்த கடிதங்களே அதிகம் பிரசுரம் ஆகியுள்ளன.

குறிப்புகள்

1. கலைவாணி., சோ. தமிழ் நாளிதழ் ஞாயிறு இணைப்பு வாசகர் கடிதம் ஓர் ஆய்வு, ஆய்வுக்கோவை-1993, தொகுதி-1, ப. 202.
2. சிவக்கண்ணன்., அ. தமிழ் இதழ்களில் சமுதாய உணர்வு, ப. 53.
3. தினகரன் வசந்தம் நாளிதழ் இணைப்புமலர் ஆசிரியர் எழுதிய கடிதம் ப. 1
4. குடும்பமலர், 4–7–93 ப. 30
5. தினமணிச்சுடர், 17–7-93, ப. 14
6. சிறுவர்மலர், 2–7-93, ப. 11.
7. சிறுவர்மலர், 30-7-93, ப. 26.

இனி ஒரு விதி செய்வோம்!

செ. முத்தரசப்பன்

சமய மேடைகள்
பலி பீடங்களாய்ப்
பரிணாமம்!

வரப்புத் தகராறுகளால்
அங்கங்களுக்கு அறுவடை!

தினமும்
மரணப் பட்டியலை
மடிநிறையச் சுமந்து கொண்டு
செய்தித் தாள்கள்!

எட்டுத் திக்கும் சென்று
ஆயுதங்களை மட்டுமே
கொணர்ந்திங்கு சேர்த்தால்
ஓயாத மரண ஓலம்!

இன்று
மனுநீதிச் சோழனே
மகனுக்கு ஆணையிடுகிறான்
பசுவையும் கொல்லச் சொல்லி .....!

பூமியின்
பாதையெங்கும்
வன்முறை முட்கள்!

நாம்
பாதைகளைத் திருத்திப்
பயணம் செய்வோம்!

காயப்படுத்தும் முட்கள்
இனி
முகாரி பாடட்டும்!

மனித நேயம்
எங்கும்
மணம் வீசட்டும்!

அந்தப்
புதிய பாதையில்
பூமியைத் திருப்புவோம்!

அமைதிக் கோட்டைக்கு
அடிக்கல் நாட்ட
வன்முறையைப் பலி கொடுப்போம்!

தேசக் கோடுகள்
குருதிகளால் மட்டுமே
குறியிடப்படுமென்றால்
இந்தப் பூமிக்குப்
புதுப்பிறவி தருவோம்!
ஆம்!!
பொதுப் பிறவி பெறுவோம்!!!

(எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டை ஒட்டி மாநில அளவில் நடைபெற்ற கவிதைப்போட்டியில் முதல் பரிசு பெற்றது.)

சப்பானிய ஐசுடீ

அமரன்

1. வீழ்ந்த மலரொன்று,
மேலே கிளைக்குத் திரும்புவதா-
பார், பட்டாம் பூச்சி

—மோரிடாகே
(1472-1549)

2. பட்ட மரக்கிளையைப்
பற்றிப் படருது தனிக்காகம்,
மற்றும் அந்திமாலை

—பாஷோ
(1644-1694)

3. ஆழத்(து) இரவமிழ,
தூரத்தே தூங்கும் சிற்றூர்-
கேள்கேள்! ஆற்றொழுக்கு.

—பூஸன்
(1716-1783)

4. வாவா, ஆடுவோம் நாம்-
யாருமில்லை : அம்மா, அப்பா!
ஏழைச் சிறுகுருவி.

—இஸா
(1763-1827)

5. கோடரி பயன்படாது-
காடாய் வளர்ந்த மரத்தினிலே
நீடுவாழ் காட்டேரி

—ஷிகி
(1869-1902)

6. பூச்சாடி பற்றியும்
காற்றோட்ட மலையின் இழிந்தும்-
பூக்கிறதே நீலம்!

—மிதுஹரா சுவோசி
(1892-1981)

7. கமகம குளியலாச்சு
அமைதியாய் நடந்தாலும் மிகத்தான்
திமிரும் குழல் வளையம்.

—ஹஷிமொடோ டகாடோ
(1899-1963)

திருப்பதி பிரிண்டர்ஸ் ○ மதுரை-1.